REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper

மின்னிதழ்
2023 நவம்பர் 25 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 280 | Saturday 25, November, 2023 | 10 பக்கங்கள் | 50/-

## இரண்டு அமைச்சுகளுக்கு செயலாளர்கள் நியமனம்

### வர்த்தமானி வெளியீடு



இரண்டு அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்களை நியமிப்பது தொடர்பாக அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய, மின்சக்தி மற்றும் 06

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில்

## 06 மின் உற்பத்தி திட்டங்களை டிசம்பர் மாதம் ஆரம்பிக்க திட்டம்

### மின்சார சபை இலாபம் அடைந்தால் அதன் பிரதிபலன்கள் மக்களுக்கு வழங்கப்படும்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மன்னார் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம், பூநகரி மின் உற்பத்தித் திட்டம், சம்பூர் அனல் மின் உற்பத்தித் திட்டம் உட்பட 6 மின் உற்பத்தித் திட்டங்களை அடுத்த டிசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக மின் சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர 06

## பொருளாதாரம் தொடர்பான எந்த விவாதத்துக்கும் நான் தயார்

### 07 நாட்கள் எனினும், விவாதிக்கவும் தயார்

### சபையில் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்தமைக்கான காரணத்தை புள்ளிவிபரங்களுடன் நிரூபிக்க முடியுமென, அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். வரிக் குறைப்பு செய்ததால் ஒரே நாளில் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி 06

## அரசியலமைப்பு பேரவை குறித்து சுமந்திரன் MP இரட்டை நிலைப்பாடு

### அவரது கருத்து விந்தையாக இருக்கிறதென ஜனாதிபதி தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசியலமைப்பு பேரவை நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதி என அன்று நீதிமன்றத்தில் தெரிவித்த சுமந்திரன் எம்.பி, இன்று பாராளுமன்றத்தில் அவ்வாறில்லையென மாற்றுக் கருத்தை தெரிவிப்பது விந்தையானதென ஜனாதிபதி 06

இலத்திரனியல் Navigation வடிவமைப்பு இருப்பின்

# இலங்கைக்கு அருகில் பயணிக்கும் கப்பல்களால் வருவாய் ஈட்டலாம்

### வருடாந்தம் சுமார் 200 மில். டொலர் ஈட்ட அமைச்சர் யோசனை

இலங்கை கடற்பரப்புக்கு அருகில் பயணிக்கும் கப்பல்கள் மூலம் நாட்டுக்கு வருடாந்தம் சுமார் 200 மில்லியன் டொலர் வருமானம் ஈட்டும் வகையில் இலத்திரனியல் கடல்சார் விளக்கப்படங்களை (Electronic Navigation Charts) உருவாக்க தேசிய நீரியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டுமென, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

நாரா நிறுவனத்துடனான ஒப்பந்தத்துக்கமைய தற்போதுள்ள கடல்சார் வரைபடங்கள் பிரித்தானிய நீரியல் அலுவலகத்தால் செயற்படுத்தப்படுவதாகவும் எதிர்காலத்தில் இலத்திரனியல் கடல்சார் விளக்கப்படங்களை உருவாக்கும் பொறுப்பை கடற்படையினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (24) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே, இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், நாடு பல சவால்களை எதிர்கொண்டிருந்த வேளையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதவியை வழங்கினாரெனத் தெரிவித்தார். 06



ஒவ்வொரு ஆண்டும் சுமார் 45 கப்பல்கள்– வரை நம் நாட்டின் கடல் எல்லை வழியாக பயணம் செய்கின்றன. இவற்றின் மூலம் வருவாயை பெறலாம்

‘வற்’ வரி அதிகரிக்கப்பட்டாலும்

## மண்ணெண்ணெய்க்கும் டீசலுக்கும் வரி விலக்கு

### அமைச்சர் கஞ்சன விஜேசேகர சபையில் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

‘வற் வரி’ அதிகரிப்பானது மண்ணெண்ணெய் மற்றும் டீசல் விலையில் தாக்கம் செலுத்தாது என்றும் அவற்றுக்கு வரி விலக்கு வழங்கப்படும் எனவும், அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார். அடுத்த ஆண்டு முதல் மத வழிபாட்டு தலங்களுக்கான மின் கட்டணத்தில் சலுகை வழங்க எதிர்பார்த்துள்ளோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார். 06

## நீர்வளத்தை விற்பனை செய்யும் எந்த தீர்மானமும் அரசிடமில்லை

### சபையில் அமைச்சர் மஹிந்த அமரவீர




**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் நீர்வளத்தை வெளிநாட்டுக்கு விற்பனை செய்வதற்கான எந்தத் தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லையென்பதுடன், இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக குறிப்பிடுவது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதென, அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இவ்வாறானதொரு பேச்சுவார்த்தை கூட நடத்தப்படவில்லையெனத் தெரிவித்த அமைச்சர், 06

## ரயில் ஆசன முன்பதிவுகளுக்கு நவீன புதிய செயலி அறிமுகம்

### rdmns.lk தகவல்களை பெறலாம்



ரயில் ஆசன முன்பதிவுகளை மேற்கொள்வதில் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியத்தை தவிர்க்கும் வகையில் ரயில்வே திணைக்களம் புதிய டிஜிட்டல் முறையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்நிலையில், RDMNS.LK எனும் செயலி மூலம் ஆசன முன்பதிவு மேற்கொள்ளலாமென, 06

## G.C.E. A/L மீள் மதிப்பீட்டு பெறுபேறு வெளியாகியது



க.பொ.த. உயர்தரப் பரீட்சை மீள் மதிப்பீட்டு பெறுபேறுகள் நேற்று வெளியாகியுள்ளதாக, பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk மற்றும் results.exams.gov.lk எனும் இணையத்தளங்களுக்குச் சென்று மாணவர்கள் பெறுபேற்றை பார்வையிட முடியுமெனவும், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி.அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

## வெளிநாட்டுக்கு அதிகளவில் குழந்தைகள் கடத்தல்

### CID இன் விசாரணை தீவிரம்

இலங்கையில் குழந்தைகளை கடத்தி வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யும் கும்பல் தொடர்பான விசாரணையை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தீவிரப்படுத்தியுள்ளதாக கொழும்பு உயர் நீதிமன்ற நீதவான் பிரசன்ன அல்விஸிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்றுமுன்தினம் (23) தெரிவித்தனர்.

அதிகளவான குழந்தைகள் கண்டியிலிருந்து கடத்தப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளதுடன், இந்தக் கடத்தல் தொடர்பாக நோர்வேயிலுள்ள 06

## இலங்கை கிரிக்கெட் இடைக்கால குழு மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு



இலங்கை கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக்குழு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான மேலதிக விசாரணையை ஒத்திவைப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் மீண்டும் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் டி.என்.சமரகோன் முன்னிலையில் நேற்று (24) விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே, இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய, இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எதிர்வரும் 06

ஒவ்வொருவரிடமிருந்தும் ரூ. 25 இலட்சம் அறவீடு

## இஸ்ரேலில் விவசாயத்துறையில் வேலைவாய்ப்பு தருவதாக மோசடி

### நேர்முகப் பரீட்சையின்போது அதிரடி சுற்றிவளைப்பு



இஸ்ரேலில் விவசாயத்துறையில் வேலைவாய்ப்பு இருப்பதாகக் கூறி நேர்காணல் நடத்திய கணவன், மனைவி ஆகிய இருவரும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். சமூக ஊடகங்களில் காணொளிகளை வெளியிட்டு, இஸ்ரேலில் விவசாயத்துறையில் வேலைக்கு 06

### யாழ். சித்தங்கேணி இளைஞர் மரணம்

## சந்தேகநபர்கள் ஐந்து பேரையும் கைது செய்து ஆஜர்படுத்த உத்தரவு

**யாழ். விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்**

யாழ். சித்தங்கேணியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞரின் மரணம் தொடர்பாக சாட்சி பெயர் குறிப்பிட்டுக் கூறிய இருவரையும், அங்க அடையாளங்களைக் கூறிய மற்றைய மூவரையும் உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் 06

பாடசாலை விடுமுறை அறிவிப்பு

## டிசம்பர் 22 முதல் பெப்ரவரி 02 வரை



பாடசாலை விடுமுறை டிசம்பர் மாதம் 22ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதிவரை வழங்கப்படுமென, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.


பாராளுமன்ற உறுப்பினர் சமன்ப்ரிய ஹேரத் பாராளுமன்றத்தில் நேற்று (24) எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, "க.பொ.த. சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்கு முகங்கொடுக்கும் மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி பாடநெறிகள் பல ஆரம்பிக்கப்படும். 06

### தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு

## கடத்தப்படவிருந்த 83 மூடை பீடி இலைகள் பறிமுதல்

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



இந்தியாவின் தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கடத்த முற்பட்ட 83 மூடைகளில் பொதியிடப்பட்ட 4,150 கிலோகிராம் பீடி இலைகளை பொலிஸார் பறிமுதல் செய்ததுடன், இது தொடர்பாக இருவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். பீடி இலை கடத்தல் தொடர்பாக தூத்துக்குடி நகர தனிப்படை பொலிஸாருக்கு தகவல் 06

## டெங்கு ஒழிப்பு பணியில் PHI மீண்டும் களத்தில்



நாட்டில் டெங்கு ஒழிப்புப் பணியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

சுகாதார அமைச்சருடன் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக, இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்தது.

இதேவேளை, கொடுப்பனவுகளை அதிகரிப்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் அண்மையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பிரதமர் மோடியை அவதூறாக பேசியமை

## ராகுல் காந்திக்கு தலைமை தேர்தல் ஆணையம் அழைப்பு



தேர்தல் பிரசாரத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தொடர்பாக அவதூறாக பேசிய விவகாரம் தொடர்பாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்திக்கு தலைமை தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. ராஜஸ்தான் சட்டப்பேரவை தேர்தல் இன்று (25) நடைபெறுவதுடன், இதையிட்டு கடந்த 22ஆம் திகதி ராஜஸ்தானின் பார்மேர் மாவட்டத்தின் 06

## டயனா கமகேயின் மனு நிராகரிப்பு

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவராக சஜித் பிரேமதாச மற்றும் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டார செயற்படுவதை தடுக்கும் இடைக்கால தடை உத்தரவு கோரி இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தாக்கல் செய்த மனு, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் நேற்று (24) நிராகரிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் அதன் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் ஐ.ம.சக்தியில் பதவி வகித்தமைக்கு எதிராக இராஜாங்க அமைச்சர் 06

# சர்வதேச செய்திகள்

## புதிய நோய் பரவல் பற்றி சீனா விளக்கம்

சீனாவில் பரவும் மூச்சுத்திணறல் சம்பவங்களில் வழக்கத்துக்கு மாறான அல்லது புதுவகையான நோய்க் கிருமிகள் எதுவும் காணப்படவில்லை என்று சீனா கூறியுள்ளது.



நாட்டின் வடக்கில் அதிகரிக்கும் நிமோனியா சம்பவங்கள் குறித்து உலக சுகாதார அமைப்பு விபரங்களைக் கேட்டபோது சீனா இவ்வாறு தெரிவித்தது.

சீனாவில் ஒக்டோபர் நடுப்பகுதியிலிருந்து சளிக்காய்ச்சல் சம்பவங்கள் உயர்ந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

முந்தைய மூன்றாண்டுகளின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது இந்த உயர்வு அதிகமாகும்.

லியாவ்நிங், தலைநகர் பீஜிங் உட்பட அனைத்துப் பகுதிகளிலும் அசாதாரண மருத்துவப் பிரச்சினைகள் எதுவும் இல்லை என சீன அதிகாரிகள் அறிவுறுத்தியதாக அமைப்பு கூறியது. சீனாவின் தேசிய சுகாதார ஆணையம், கொவிட்–19 கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதால் இந்த அதிகரிப்பு ஏற்பட்டதாகக் கடந்த வாரம் கூறியது.

மேலும் சுற்றுச்சூழலில் ஏற்கனவே அறியப்பட்ட சளிக்காய்ச்சலும் பிள்ளைகளைப் பாதிக்கும் பொதுவான கிருமியும் அதிகரிப்புக்குக் காரணங்களாகக் கூறப்பட்டன.

இதற்கிடையே பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு உலக சுகாதார அமைப்பு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. தடுப்பூசி, பாதுகாப்பான இடைவெளி, முகக்கவசம் முதலியவை அவற்றில் அடங்கும்.

## கத்திக்குத்து தாக்குதலை அடுத்து அயர்லாந்து தலைநகரில் கலவரம்

அயர்லாந்து தலைநகர் டப்ளினில் இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதலை அடுத்து வன்முறை வெடித்துள்ளது.



இந்தக் கத்திக்குத்து தாக்குதலில் 3 சிறுவர்கள் உட்பட ஐவர் காயமடைந்தனர். தாக்குதல் நடத்தியவர் வெளிநாட்டவர் என்ற வதந்தி பரவியதால் நூற்றுக்கணக்கானோர் போராட்டத்தில் குதித்தனர்.

அவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. சில வாகனங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. வலசாரி சித்தாந்தத்தைப் பின்பற்றும் குழுவினரே வன்முறைக்குக் காரணம் என்று அயர்லாந்துக் பொலிஸ் தலைவர் சாடினார்.

கத்திக்குத்துச் சம்பவத்தைக் குற்றவாளிகள் பேரழிவுக்குப் பயன்படுத்திக்கொள்வதாக அயர்லாந்து நீதியமைச்சர் குற்றஞ்சாட்டினார்.

கத்தி வைத்திருந்த 50 வயது மதிக்கத்தக்க ஆடவர் ஒரு பாலர் பாடசாலைக்கு வெளியே சிலரைத் தாக்கினார். அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். தாக்குதல் குறித்த புலனாய்வு தொடர்கிறது.

மறுபுறம் போராட்டம் நாடு முழுவதும் விரிவடைந்து விடக்கூடாது என பொலிஸார் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

பாராளுமன்றத்தை சுற்றி பொலிஸ் குவிக்கப்பட்டுள்ளது. கலவரத்தை கட்டுப்படுத்த 400க்கும் அதிகமான பொலிஸார் டப்ளின் நகரம் முழுவதும் குவிக்கப்பட்டு நிலைமையை கண்காணித்து வருகின்றனர்.

# காசாவில் போர் நிறுத்தம் ஆரம்பம்

## உதவி வாகனங்கள் நுழைவு: பணயக்கைதிகள் விடுவிப்பு: வடக்கு காசா செல்வதற்கு இஸ்ரேல் முட்டுக்கட்டை

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான தற்காலிக போர் நிறுத்தம் காசாவில் நேற்று அமுலுக்கு வந்த நிலையில், குண்டு வீச்சுகள், பீரங்கி தாக்குதல்கள் மற்றும் ரொக்கெட் தாக்குதல்கள் தொடர்பிலான பாரிய சம்பவங்கள் பதிவாகாதபோதும் போர் நிறுத்த மீறல்கள் தொடர்பில் தெரிவிக்கின்றன. எனினும் வடக்கு காசாவில் குடியிருப்பாளர்கள் தமது வீடுகளுக்கு திரும்புவதை இஸ்ரேலிய படை தடுத்து வருதாக கூறப்படுகிறது.

ஒரு சம்பவத்தில் வீடுகளுக்கு திரும்பும் பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேலிய துருப்புகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக அல் ஜசீரா தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.



இரு தரப்பும் பரஸ்பரம் குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளன.

48 நாட்கள் நீடித்த இந்தப் போரின், போர் நிறுத்தம் உள்ளூர் நேரப்படி நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பமானது. வடக்கு மற்றும் தெற்கில் விரிவான போர் நிறுத்தம் ஒன்று அமுல்படுத்தப்பட்டதோடு ஹமாஸ் அமைப்பின் பிடியில் இருக்கும் பணயக்கைதிகளில் 13 இஸ்ரேலிய பெண்கள் மற்றும் சிறுவர்கள் விடுவிக்கப்பட்டனர். பெரும் அழிவை சந்தித்துள்ள காசாவுக்கு உதவிகள் செல்ல ஆரம்பித்துள்ளன.

இதன்போது கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கையின்படி இஸ்ரேலிய சிறையில் இருக்கும் பலஸ்தீன கைதிகளும் விடுவிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் வடக்கு காசாவில் இஸ்ரேலிய போர் விமானங்களின் செயற்பாடுகளை காணவில்லை என்றும் பலஸ்தீன ரொக்கெட் தாக்குதல்களின் சத்தங்கள் கேட்கவில்லை என்றும் அங்கிருக்கும் ரோய்ட்டர்ஸ் செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நான்கு நாள் போர் நிறுத்தத்தின்போது வடக்கு காசாவில் உள்ள மக்கள் தமது வீடுகளுக்கு திரும்பக் கூடாது என எச்சரித்து இஸ்ரேலிய இராணுவம் துண்டுப்பிரசுரங்களையும் வானில் இருந்து வீசியுள்ளது.

இஸ்ரேலின் டஜன் கணக்கான டாங்கிகள் உட்பட இராணுவ வாகனங்கள் காசாவில் இருந்து வெளியேறுவதை கண்டதாக ரோட்டர்ஸ் செய்தியாளர் விபரித்துள்ளார். பலஸ்தின பகுதியில் இருந்து வாபஸ் பெறுவதாக இஸ்ரேலிய வாகனத் தொடரணியின் இராணுவ வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

தெற்கு காசா பகுதிக்கு அருகில் இருக்கும் இரு இஸ்ரேலிய கிராமங்களில் பலஸ்தீன ரொக்கெட் குண்டுகள் தொடர்பில் எச்சரிக்கும் வகையில் சைரன் ஒலி எழுப்பப்பட்டது. போர் நிறுத்தத்தை மீறி ஹமாஸ் ரொக்கெட் தாக்குதல் ஒன்றை நடத்தியதாக இஸ்ரேல் குற்றம்சாட்டியுள்ளது.



போர் நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் காசாவில் எந்த குண்டு சத்தமும் கேட்கவில்லை என்று அங்கிருந்து வரும் செய்திகள் கூறியதாவது, “நாம் முழு நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்போடு இருப்பதோடு எமது போராட்டம் குறித்து பெருமை கொள்கிறோம். வலியை ஏற்படுத்தியபோதும் இந்த அடைவுக்காக நாம் பெருமை கொள்கிறோம்” என்றார்.

போர் நிறுத்தம் ஆரம்பிக்கும் கடைசி நிமிடம் வரையும் காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் உக்கிரம் அடைந்திருந்தன. இதில் காசா நகரில் உள்ள மருத்துவமனை ஒன்றும் இலக்கு வைக்கப்பட்டது. போர் நிறுத்தம் என்பது தற்காலிகமானது என்றும் போர் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் இரு தரப்பும் குறிப்பிட்டுள்ளன.

காசாவில் உதவி வாகனங்கள்

காசாவின் இந்தோனேசிய மருத்துவமனை இடைவிடாத குண்டு தாக்குதலுக்கு இலக்கானதோடு அங்கு மின் வெளிச்சம் இல்லாமல் சத்திர சிகிச்சைகள் நடத்தப்பட்டன. அங்கு வயதானவர்கள் படுத்த படுக்கையாகவும் சிறுவர்கள் நகர முடியாத அளவுக்கு பலவீனமான நிலையிலும் இருப்பதாக காசா சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மருத்துமனையை இஸ்ரேலிய இராணுவம் நேற்றுக் காலை சுற்றிவளைத்து மேற்கொண்ட சோதனையின்போது ஒரு பெண் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது. காசாவுக்கு மேலதிக உதவிகள் செல்ல ஆரம்பித்திருக்கும் நிலையில் பணயக்கைதிகளின் முதல் குழுவினர் உள்ளூர் நேரப்படி நேற்று பிற்பகல் 4 மணிக்கு விடுவிக்கப்பட்டனர். இந்த நான்கு நாள் போர் நிறுத்த காலத்தில் மொத்தம் 50 பணயக்கைதிகள் விடுவிக்கப்படவிருப்பதாக கட்டார் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் மாஜித் அல் அன்ஸாரி தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தம் ஆரம்பித்து ஒன்றரை மணி நேரத்தின் பின் எகிப்தில் இருந்து காசாவுக்குள் உதவி வாகனங்கள் நுழைய ஆரம்பித்தன. எகிப்திய அமைப்புகளை பிரதிநிதித்துவம் செய்யும் முதல் இரு வாகனங்களில் “மனிதாபிமானத்திற்காக ஒன்றிணைவோம்” மற்றும் “காசாவில் எமது சகோதரர்களுக்காக” என்று எழுதப்பட்ட பதாகைகள் இருந்தன.

போர் நிறுத்த காலத்தில் காசாவுக்கு தினசரி 130,000 லீற்றர் டீசல் மற்றும் நான்கு டிரக் எரிவாயு விநியோகிக்கப்படவுள்ளதோடு தினசரி அங்கு 200 டிரக் உதவிகள் வழங்கப்படவுள்ளதாக எகிப்து தெரிவித்துள்ளது.

இதன்போது இஸ்ரேலிய சிறையில் இருக்கும் குறைந்தது 150 பலஸ்தீனர்கள் இந்த போர் நிறுத்த காலத்தில் விடுவிக்கப்படவுள்ளனர். “இந்த போர் நிறுத்தம் பரந்த அளவில் செயற்படும் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றை அடைவதற்கு



வாய்ப்பை ஏற்படுத்தும்” என்று போர் நிறுத்தத்திற்கு மத்தியஸ்தம் வகிக்கும் கட்டார் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

தமது படைகளின் எதிர்ப்பு நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டதாக ஹமாஸ் அமைப்பு டெலிகிராம் ஊடாக உறுதி செய்துள்ளது.

எனினும் ஹமாஸ் ஆயுதப் பிரிவின் செய்தித் தொடர்பாளர் அபு உபைதா, பின்னர் வெளியிட்ட ஒரு வீடியோ செய்தியில் “இது ஒரு தற்காலிக போர் நிறுத்தம்” என்று குறிப்பிட்டார். இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்குக் கரை உட்பட “அனைத்து எதிர்ப்பு முனைகளிலும் (இஸ்ரேலுடன்) மோதலை அதிகரிக்க” அழைப்பு விடுத்தார். காசாவில் போர் ஆரம்பித்தது தொடக்கம் மேற்குக் கரையிலும் வன்முறை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மோதல் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று இஸ்ரேலிய இராணுவமும் தெரிவித்துள்ளது.

“இது குறுகிய நிறுத்தமாக இருக்கும். கடைசியில் மோதல் பெரும்பாலும் பாரிய அளவில் தொடரும் என்பதோடு மேலும் பணயக்கைதிகளை விடுவிக்க அழுத்தம் கொடுக்கப்படும். குறைந்தது இரண்டு மாத போர் எதிர்பார்க்கப்படுகிறது” என்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் களன்ட் கடற்படை கமாண்டோக்களிடம் உரையாற்றும்போது தெரிவித்துள்ளார்.

“வடக்கு காசாவை கட்டுப்படுத்துவது நீண்ட போர் ஒன்றின் முதல் கட்டமாக இருப்பதோடு, அடுத்த கட்டத்திற்கும் நாம் தயாராகி வருகிறோம்” என்று இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் டனியேல் ஹகரி தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் ஊடுருவிய பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலில் 1,200 பேர் கொல்லப்பட்டு சுமார் 240 பேர் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்ட நிலையிலேயே காசா மீது இஸ்ரேல் வான், தரை மற்றும் கடல் மார்க்கமாக பயங்கர தாக்குதல்களை ஆரம்பித்தது.

அந்த குறுகிய நிலப்பகுதி மீது இஸ்ரேல் இடைவிடாது நடத்திய குண்டு மழையில் 14000க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

இதில் சுமார் 40 வீதமானவர்கள் சிறுவர்களாவர். இந்த வன்முறையில் இருந்து உயிர் தப்புவதற்கு 2.3 மில்லியன் மக்கள் தொகை கொண்ட காசாவில் ஆயிரக்கணக்கானோர் வெளியேறியதோடு இஸ்ரேல் முழு முற்றுகையை மேற்கொண்டதால் உணவு, நீர் மற்றும் எரிபொருள் அனைத்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு பாரிய மனிதாபிமான நெருக்கடி ஒன்று ஏற்பட்டது.



“மக்கள் சோர்வடைந்து, மனித நேயத்தின் மீது நம்பிக்கை இழந்து வருகின்றனர்” என்று ஐ.நாவின் பலஸ்தீன அகதி நிறுவனத்தின் ஆணையாளர் நாயகம் பிலிப்பே லஸரினி வியாழக்கிழமை குறிப்பிட்டிருந்தார். காசாவுக்கான பயணத்தில் சொல்ல முடியாத துயரங்களை கண்டதாகவும் அவர் விபரித்தார்.

தெற்கு காசா நகரான கான் யூனிஸில் வீதிகளில் மக்கள் நிரம்பி இருந்தனர். காலித் அபூ அன்சா என்ற பலஸ்தீனர் ரோய்ட்டர்ஸுக்கு

### காசா அழிவுகள்



கடந்த ஒக்டோபர் 7 தொடக்கம் காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் ஏற்பட்ட அழிவு விபரம்,

- சுமார் 6,000 சிறுவர்கள் மற்றும் 4,000 பெண்கள் உட்பட 14,800க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.
- 2.3 மில்லியன் மக்கள்தொகை கொண்ட காசாவில் 1.7 மில்லியனுக்கும் அதிகமானோர் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்தனர்.
- இவ்வாறு இடம்பெயர்ந்து பலஸ்தீனர் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிவாரண மற்றும் பணிகள் நிறுவனத்தின் வசதிகளில் அடைக்கலம் பெற்றிருந்த நிலையில் இஸ்ரேலிய தாக்குதல்களில் குறைந்தது 191 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 798 பேர் காயமடைந்தனர்.
- காசாவில் பாதிக்கும் அதிகமான வீடுகள் அழிக்கப்பட்டு அல்லது சேதமாக்கப்பட்டுள்ளன. இதில் பல டஜன் வழிபாட்டுத் தலங்களும் அடங்கும். போருக்கு முன் வடக்கு காசாவில் 24 மருத்துவமனைகள் இயங்கின. இதில் 22 மருத்துவமனைகள் செயலிழந்தோ அல்லது புதிய நோயாளிகளை அனுமதிக்க முடியாத நிலையிலோ உள்ளன.
- தெற்கு காசாவின் 11 மருத்துவ வசதிகளில் தற்போது எட்டு மாத்திரமே இயங்குகின்றன.
- எரிபொருள், நீர் மற்றும் கோதுமை மா இல்லாதது அல்லது இஸ்ரேலிய தாக்குதலில் சேதமடைந்ததால் காசாவில் எந்த ஒரு பேக்கரியும் இயங்கவில்லை

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444, 0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

2023 நவம்பர் 25 சனிக்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.45
லுஹர் - 11.59
அஸர் - 03.21
மஃரிப் - 05.51
இஷா - 07.05

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் கார்த்திகை 09
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



### தடுக்கும் உரிமை எவருக்கும் கிடையாது

## ஜனாதிபதிக்கு எந்த சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றில் உரையாற்ற முடியும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதி எந்தச் சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றத்துக்கு வருகை தந்து சபையில் உரையாற்ற முடியுமென்பது தெளிவாக அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாக, பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றுவதற்கு உள்ள அதே உரிமை ஜனாதிபதிக்கும் அரசியலமைப்புக்கிணங்க காணப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அரசியலமைப்பின் 32ஆவது அத்தியாயத்தின்படி எந்தச் சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வருகை தர முடியுமென்பதுடன், அந்த வகையில் பாராளுமன்ற அமர்வுகள், விசேட ஆரம்ப நிகழ்வுகள் அதனை பின்பற்றும் நிகழ்வுகளுக்கும் அவர் வருகை தர முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி, நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சபையில் தெரிவித்த உண்மைக்கு புறம்பான கூற்று தொடர்பாக தெளிவுபடுத்தலேயே வழங்கினார்.

அவர் உரையாற்றுகையில், அனைவரும் அமைதியாக அதனைக் கேட்டுக்கொண்டிருந்தனர். ஏனெனில், அரசியலமைப்புக்கிணங்கவே அவர் அந்த தெளிவூட்டலை வழங்கினார்.

எனினும், அதன் பின்னர் ஜனாதிபதிக்கு அவ்வாறு உரையாற்ற முடியாதென எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர். அதற்கான எந்த உரிமையும் அவர்களுக்கு கிடையாதெனவும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி ஆற்றிய உரையை அடுத்து, ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிக்கு இடையில் ஏற்பட்ட சர்ச்சைகளுக்கு பதிலளிக்கும் வகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

### ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக

## புதிய வேலைத்திட்டம், சுற்றுநிருபம் தயாரிக்கப்பட வேண்டும்

### ஆளும் கட்சி பிரதான அமைப்பாளர் பிரசன்ன



ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக புதிய வேலைத் திட்டம் மற்றும் சுற்றுநிருபம் தயாரிக்கப்பட்டு மாகாண மட்டத்தில் இணைக்கப்பட வேண்டுமென, ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஆசிரியர் தொழிற்சங்கங்களின் அங்கத்தவரல்லாத ஆசிரியர்களுக்கு ஆசிரியர் இடமாற்றத்தின் போது, அதிக வேறுபாடு காட்டப்படுகின்றது. ஆசிரியர் இடமாற்ற சங்கங்கள் ஒன்றிணைந்து ஆசிரியர் இடமாற்ற பட்டியலை தயாரிப்பின் அது தவறான செயற்பாடெனவும், அமைச்சர் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கடந்த புதன்கிழமை (22) வரவு செலவுத் திட்டக் குழு ஒன்றுகூடிய போது ஆளும் மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்வி தொடர்பாக நடத்திய விவாதத்தின் போது, கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆளும் கட்சி பிரதான அமைப்பாளரும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்த போது, "ஆசிரியர் இடமாற்ற சங்கங்களில் ஆசிரியர்களுக்கு பாரிய வேறுபாடு காட்டப்படுவதாகவும் ஆசிரியர் இடமாற்ற சங்கங்களில் தொழிற்சங்கங்கள் தலையிட்டு அதன் அங்கத்தவர்களுக்காக செயற்படுகிறார்கள்.

அதன் அங்கத்தவரல்லாதவர்களுக்கு அவ்வாறு அசாதாரணமே இடம்பெறுகின்றது. அதனால் நாம் யோசனையொன்றுக்கிணங்க ஆசிரியர் இடமாற்ற சபைகளுடன் தொடர்புபட முடியும். தமது அங்கத்தவர்களுக்கு அசாதாரணம் ஏற்படுமாயின், ஒன்றிணைக்க முடியும்.

அதனால் இவ்விடமாற்ற வேலைத்திட்டம் மற்றும் சுற்றுநிருபத்தை தயாரித்து, மாகாண மட்டங்களுக்கு அனுப்பினால் சிறந்தது. கல்வி அமைச்சர் 2017ஆம் வருடத்தில் கல்வி அமைச்சு வெளியிட்ட சுற்றுநிருபத்துக்கிணங்கவே இவ்விடமாற்ற சங்கங்கள் ஒன்றுகூடுகின்றன. அதில் தான் ஏதேனும் மாற்றம் இடம்பெற வேண்டும்.அதற்காக அவர்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன" எனத் தெரிவித்தார்.



இறந்த ஆன்மாக்களை நினைவுகூரும் மாதத்தையிட்டு லேக்ஹவுஸ் கிறிஸ்தவ சங்கத்தின் ஏற்பாட்டில் விசேட திருப்பலி பூஜை அருட்தந்தை பிரகீத் டில்சாந்தினால் நிறைவேற்றப்பட்டது. நிகழ்வில் லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் ஹரேந்திர காரியவசம், ஆசிரியபீட பணிப்பாளர் சிசிர பரணதந்திரி உட்பட நிர்வாக சபை உறுப்பினர்கள், பொது முகாமையாளர் மற்றும் சங்க உறுப்பினர்கள், ஊழியர்கள் பலர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வு லேக்ஹவுஸ் நிறுவனத்தில் நேற்று (24) நடைபெற்றது. (படங்கள்: சிந்தக குமாரசிங்க)

## சம்பிக்கவுக்கு எதிரான வழக்கை இடைநிறுத்த நீதிமன்றம் உத்தரவு



2016ஆம் ஆண்டு ராஜகிரிய பிரதேசத்தில் பாரிய வாகன விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக மேல் நீதிமன்றில் விசாரணையிலுள்ள வழக்கு விசாரணையை இடைநிறுத்துமாறு அறிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவை வெள்ளிக்கிழமை (24) பிறப்பித்துள்ளது.

இந்த மனு மீதான விசாரணை முடியும் வரை இந்த இடைக்கால உத்தரவு அமுலிலிருக்கும் என நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர் நிஸ்சங்க பந்துல கருணாரத்ன மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் சமத் மொராயஸ் ஆகியோர் அடங்கிய குழு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. பாட்டலி சம்பிக்க ரணவக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றை விசாரிப்பதற்கு அனுமதியளித்து நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

### சபை அமர்வில் கலந்துகொள்வதற்கு

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்துக்கு 02 வாரத் தடை விதிக்க வேண்டும்

### சபாநாயகரிடம் ஆளும் கட்சியினர் வலியுறுத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இரு வாரங்களுக்கு சபை அமர்வில் கலந்துகொள்வதை தடை செய்யுமாறு சபாநாயகரிடம் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டனர்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் முன்வைத்த இந்த யோசனையையடுத்து சஜித் பிரேமதாசாவுக்கும் ஆளும் கட்சியினருக்குமிடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டதால், சபை சுமார் அரை மணித்தியாலம் அமளிதுமளியானது.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி முன்வைத்த விசேட கூற்றையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதி தொடர்பிலும் ஆளும் கட்சி எம்.பி.க்கள் தொடர்பிலும் கடும் தொனியில் தகாத வார்த்தைகளை பயன்படுத்தி முன்வைத்த கருத்துகளால் ஆளும் தரப்பினர் பெரும் ஆத்திரமடைந்தனர்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் மின்சக்தி, எரிசக்தி அமைச்சின் மீதான விவாதத்தின் போது சபைக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பு பேரவை விவகாரம் மற்றும் கடந்த ஆண்டு நாட்டில் இடம்பெற்ற போராட்டம் உட்பட சில விடயங்களை சுட்டிக்காட்டி உரையாற்றினார்.

ஜனாதிபதியின் உரையைத் தொடர்ந்து எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சில விடயங்களை குறிப்பிட்டுக்கொண்டிருந்த போது ஜனாதிபதி சபையிலிருந்து வெளியேறினார்.

இதன்போது எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஜனாதிபதி எமது கருத்தை கேட்காமல் செல்வதாகக் கூறியதுடன் ஜனாதிபதி அவர்களே செல்லாதீர்கள், செல்லாதீர்கள், ற்று நில்லுங்கள், எங்கே செல்கின்றீர்கள் எனக் கேட்டார்.

அதனையடுத்து எதிர்க்கட்சித் தலைவரின் செயலுக்கு ஆளும் கட்சியினர் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தினர். அதனையடுத்து எதிர்கட்சித் தலைவரும் ஆளும் தரப்பினரும் சபைக்குதவாத வார்த்தைகளை பரஸ்பரம் பயன்படுத்தினர்.

இதன்போது எழுந்து ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்த ஆளும் கட்சி எம்.பி.யான பிரேம்நாத் சி.தொலவத்த, எதிர்க்கட்சி தலைவரது கருத்துகள் ஆளும் கட்சியினரை அவமதிக்கும் வகையில் உள்ளன. இதனால் எமது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.

அதனைக் கண்டிக்கும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்வதை இரண்டு வாரங்களுக்கு தடை செய்ய வேண்டும் என யோசனை முன்வைத்தார். இந்த யோசனையை ஆளும் கட்சி எம்.பி. மிலான் ஜயதிலக்க வழிமொழிந்தார்.

அதனை தொடர்ந்து மீண்டும் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஜனாதிபதியின் கருத்துகளை சுட்டிக்காட்டி கருத்துகளை முன்வைத்தார். இதன்போது அரச தரப்பு எம்.பி.க்கள் மீண்டும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். இதனால் சபை பெரும் அமளி துமளியானது.

அதன்போது எழுந்த ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முறையாக நடந்துகொள்ள வேண்டும். வார்த்தைகளை முறையாக பிரயோகிக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக யோசனையொன்று முன்வைக்கப்பட்டு, அது வழிமொழியப்பட்டுள்ளது. ஆகவே பொறுப்புடன் நடந்துகொள்ளுங்கள் என்று எச்சரித்தார். இவர்களை கட்டுப்படுத்த சபைக்கு தலைமை தாங்கிய ஆளும் கட்சி எம்.பி. யான சமன் பிரிய ஹேரத்துக்கு முடியாமல் போகவே சபாநாயகர் சபா பீடத்துக்கு வருகை தந்து சபையைக் கட்டுப்படுத்தினார்.



Pathfinder மன்ற ஸ்தாபகர் மிலிந்த மொரகொடவை ஜப்பான் பாதுகாப்பு அமைச்சு பிரதிநிதிகள் அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது இந்துசமுத்திரத்துடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

## கடந்த ஒக்டோபரில் 485 எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அடையாளம்

கடந்த ஒக்டோபர் மாதக் காலப் பகுதியில் புதிதாக 485 எயிட்ஸ் நோய் தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதாக, தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டு திட்டப் பணிப்பாளர், சமூக விசேட மருத்துவ நிபுணர் ஜானகி விதான பத்திரண தெரிவித்தார்.

எச்.ஐ.வி. நோய் தொற்றாளர்களில் அதிகமானோர் பாடசாலை மாணவர்கள் அடங்குவதுடன், 15 முதல் 24 வயதுக்கு இடைப்பட்டவர்களும் பதிவாகியுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

கடந்த 2021ஆம் ஆண்டில் 411 எச்.ஐ.வி. தொற்றாளர்களும் 2022ஆம் ஆண்டில் 607 எச்.ஐ.வி. தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

### யாழ். பல்கலையின்

## மருத்துவ பீடத்துக்கு எட்டு மாடி கொண்ட புதிய கட்டடம்

**யாழ். விசேட நிருபர்**





யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்காக யாழ். நகரில் புதிதாக கட்டப்பட்ட எட்டு மாடிகளைக் கொண்ட மருத்துவப் பிரிவுக் கட்டடம் உத்தியோகபூர்வமாக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதுடன், இதற்கான சாந்தி பூஜை நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து நேற்று (24) மத சம்பிரதாயபூர்வமாக அக்கட்டடத்தில் பால் காய்ச்சப்பட்டது. இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சி.சிறீசற்குணராஜா, பல்கலைக்கழக பீடாதிபதிகள், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், மருத்துவ பீடத்தின் கல்விப் பணியாளர்கள், ஆலோசகர்கள் உட்பட பல்வேறு முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

## ஊவா, பரணகமவில் மண்சரிவு அபாயம்

**ஊவா சுழற்சி நிருபர்**

வெலிமடை மற்றும் ஊவா, பரணகமவில் தொடர்ந்து அடை மழை பெய்து வரும் நிலையில், மண்சரிவு அபாயம் காரணமாக பலர் தமது வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பான இடைத் தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளகாக, பதுளை இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

இந்நிலையில், ஊவா, பரணகம பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கலஹாகமை பிரதேசத்தில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 73 பேர் கலஹாகமை பௌத்த விகாரையிலும் அலுத்வத்தை பிரதேசத்தில் 37 குடும்பங்களைச் சேர்ந்த 122 பேர் அலுத்வத்தை பள்ளிவாசலிலும் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும், அந்நிலையம் தெரிவித்தது.

இவ்வாறு தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உலர் உணவு மற்றும் ஏனைய நலன்புரித் தேவைகளை பொலிஸாரும் ஊவா, பரணகம பிரதேச செயலகமும் மேற்கொண்டு வருகின்றன.

இதேவேளை ஊவா, பரணகமவில் கலஹாகம மற்றும் அலுத்வத்தை பிரதேசங்களில் மண்சரிவு காரணமாக சுமார் 10 க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும், பதுளை இடர் முகாமைத்துவ நிலையம் மேலும் தெரிவித்தது.

## G.C.E. O/L பெறுபேறு மாத இறுதியில் வெளியீடு

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேற்றை இம்மாத இறுதியில் வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி.அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

தற்போது க.பொ.த. சா/த பரீட்சைப் பெறுபேற்றை கணினிமயப்படுத்தும் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இப்பரீட்சை பெறுபேற்றை இன்னும் இரண்டு நாட்களில் வெளியிட முடியுமென்று அண்மையில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 09ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஊலா பிறை 10


### குறள் தரும் சிந்தனை



ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு

*தன்னிச்சையாகச் செயல்படும் பேதை, எக்காலத்திலும் துன்பமெனும் சகதியில் அழுந்திக் கிடக்க நேரிடும்.*

# இலங்கை மக்களின் புலம்பெயர் கனவுகள்!

எமது நாட்டு மக்களில் பலர் இக்காலத்தில் மேற்குநாட்டு வாழ்க்கை மீதான ஆர்வத்தில் உள்ளதைக் காண முடிகின்றது. ஏதேனுமொரு மேற்கு நாட்டுக்குப் புலம்பெயர்ந்து சென்று வாழ்வதற்கே ஏராளமானோர் விரும்புவது தெரிகின்றது. அதேசமயம் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து செல்வதற்கு இளவயதினர் மாத்திரமன்றி வயது வந்தவர்களும் பெரிதும் ஆர்வம் காட்டுவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இலங்கை மக்களில் பலரின் உள்ளக்கிடக்கை இவ்வாறிருக்கையில், கனடா போன்ற தேசங்களில் வாழ்கின்ற இலங்கையைச் சேர்ந்த புலம்பெயர் மக்களிடமிருந்து வருகின்ற செய்திகளோ வேறுவிதமாக உள்ளன. இரண்டு தசாப்த காலத்துக்கு முன்னர் இலங்கையிலிருந்து யுத்த அச்சம் காரணமாக மேற்குலகுக்குப் புலம்பெயர்ந்து சென்ற மேற்படி தமிழர்களிடமிருந்து வருகின்ற செய்திகள் மகிழ்ச்சிக்குரியதாக இல்லை.

'மேற்கு நாட்டுக் கனவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள். நீங்கள் கனவு காண்பதைப் போன்று தற்போது எதுவுமே இங்கு இல்லை. புலம்பெயர்ந்து வந்த பின்னர் வேதனைப்படாதீர்கள்!' என்று கனடா, இங்கிலாந்து போன்ற பல்வேறு தேசங்களில் வாழ்கின்ற இலங்கைத் தமிழர்கள் இப்போது கூறுகின்றார்கள்.

உண்மையில் அந்நாடுகளின் நிலைமை தற்போது எவ்வாறு உள்ளது என்பதை முதலில் ஆராய வேண்டியது அவசியம். ஏனெனில் இலங்கையில் இருந்து முன்னரெல்லாம் வடக்கு, கிழக்குத் தமிழர்கள் மாத்திரமே 'யுத்த அகதிகள்' என்ற பெயருடன் புலம்பெயர்ந்து சென்றனர். அவர்களை அரவணைப்பதற்கு மேற்குலகின் பல நாடுகள் தயாராகவும் இருந்தன.

இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கு நிகராக, நாட்டின் அனைத்து இன மக்களும் மேற்குலக வாழ்க்கையில் பெரிதும் நாட்டம் காட்டுவதைக் காண முடிகின்றது. சிங்கள் மக்களிலும் இயலுமானவர்கள் வகைதொகையின்றி மேற்குலக நாடுகளுக்குப் படையெடுப்பதைக் காண முடிகின்றது. அவர்கள் இப்போது 'பொருளாதார அகதிகள்' என்ற நாமத்துடன் புலம்பெயர நினைக்கின்றனர்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி நிலவுவதால் மேற்குலக நாடுகளுக்குச் சென்று வசதிவாய்ப்புகளுடன் வாழலாமென்று அவர்கள் கனவு காண்கின்றார்கள்.

இங்கு இரு விடயங்கள் முக்கியமானவையாகும். அவர்கள் நினைப்பதைப் போன்று இலங்கையில் தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடி நிலவவில்லை. முன்னர் நிலவிய தீவிரமான பொருளாதார நெருக்கடியில் இருந்து எமது நாடு பெருமளவில் மீண்டுள்ளது. பொருளாதார நெருக்கடி எதிர்காலத்தில் நீங்குவதற்கான சாதகமான அறிகுறிகள் தென்படுகின்றன.

இரண்டாவது விடயம் மேற்குலக நாடுகளில் தற்போது நிலவுகின்ற பாதகமான நிலைமைகள்! அந்நாடுகளிலும் பொருளாதார நெருக்கடிகள் உருவாகத் தொடங்கி விட்டன. அன்றாடம் சாதாரணமாக வாழ்வதென்றாலும் ஓய்வின்றி கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. இளவயதினராயின் ஓய்வின்றி உழைக்க முடியும். ஆனால் வயது சென்றவர்கள் அவ்வாறு உழைப்பதென்பது சாத்தியமில்லை.

மற்றவர்களின் தயவிலேயே வயதானவர்கள் வாழ வேண்டியேற்படும். இவ்வாறான வாழ்க்கை எத்தனை காலத்துக்கு நீடிக்கப் போகின்றது? அதுமாத்திரமன்றி இங்குள்ளவர்கள் கற்பனை செய்வதைப் போன்று தொழில்வாய்ப்புகளெல்லாம் அந்நாடுகளில் பெரிதும் அருகிப் போய் விட்டன. தொழில் தேடும் படலம் மோசமாகச் சென்று கொண்டிருக்கின்றது. 'தாய்நாட்டைக் கைவிட்டு புலம்பெயர்ந்து வந்தது புத்திசாலித்தனமான முடிவுதானா?' என்று தங்களைத் தாங்களே கேள்வி கேட்கும் நிலைமையொன்றுக்கு பலர் ஆளாகியுள்ளதையே காண முடிவதாக அங்கு சென்ற பலர் கூறுகின்றனர்.

இவ்வாறான நிலைமைகளையெல்லாம் வைத்துப் பார்க்கையில், மேற்குலகப் புலம்பெயர்தல் என்பது எதிர்காலத்துக்குப் பொருந்தப் போவதில்லையென்பது நன்றாகவே தெரிகின்றது. தாய்நாட்டை விட்டுப் புறப்படவிருப்போர் ஒருகணம் நிதானமாகச் சிந்திப்பது அவசியமாகின்றது.

இலங்கை எமது தாய்நாடென்பதை இந்நாட்டு மக்கள் எவருமே மறந்து விடலாகாது. இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் மிகவும் இயற்கை வளங்கள் நிறைந்த அழகிய நாடு இலங்கை ஆகும். வெளிநாட்டினரே எமது நாட்டின் இயற்கை அழகை மிகவும் புகழ்ந்துரைக்கின்றனர். இலங்கையை நோக்கி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தர விரும்புவதற்குக் காரணமும் இலங்கையின் இயற்கை வனப்பு ஆகும்.

அவ்வாறானதொரு நாட்டை எம்மால் வெறுத்தொதுக்க முடியாது. கடந்த கால அரசாங்கங்கள் தவறிழைத்து விட்டனவென்பதை மறுக்கவியலாது. அத்தவறுகள் காரணமாகவே இலங்கையில் பொருளாதார நெருக்கடி தலைதூக்கியதென்பதையும் மறுப்பதற்கில்லை.

நம் ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வொரு ஆற்றல் மறைந்து கிடக்கின்றது. அரச உத்தியோகம்தான் வாழ்க்கைக்கான ஆதாரம் என்று நினைப்பது தவறு. எமக்குள்ள ஆற்றல்களை வைத்து தாய்நாட்டிலேயே உழைத்து வாழ்வதே இன்பம் என்பதுதான் யதார்த்தம் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# மதுரையில் சிறப்பாக நடைபெற்ற உலக தமிழ்ப்பண்பாட்டு இயக்க 16ஆவது மாநாடு

மலேசியாவைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் உலகத்தமிழ் பண்பாட்டியக்கத்தின், 16ஆவது மாநாடும், புதிய பேராளர்கள் தேர்வும் 22.11.223 அன்று மதுரையின் மாஸ்காவ் விடுதியில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் ப.கு.சண்முகம் தலைமையில் நடைபெற்றன.

இம்மாநாட்டில் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, ஜெர்மனி. பிரான்ஸ், தென்னாபிரிக்கா, இலங்கை, கர்நாடகா, புதுச்சேரி, கனடா, அமெரிக்கா,போன்ற இடங்களிலிருந்து பேராளர்கள் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் நடைபெற்ற தேர்தலில், மீண்டும், தலைவராக மலேசியா தமிழ்ப்பணிச் செம்மல் ப. கு.சண்முகமும், துணைத்தலைவராகளாக பிரான்ஸ் கவிஞர் விசு. செல்வராசா மற்றும் தென்னாபிரிக்கா மிக்கிச்செட்டியும் தேர்வு செய்யப்பட்டனர். உதவித் தலைவர்களாக சிங்கப்பூர் ரத்தினவெங்கடேசன், பெங்களூர் மரு.ராஜ்குமார் செந்தமிழ் தேனி மதிவாணன் தெரிவாகினர். துணைப்பொதுச் செயலாளராக ஊடக வித்தகர் ஜெர்மனி க. கிருஷ்ணமூர்த்தியும், பொருளாளராக, பெங்களூர் சுந்தரவேலும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் கலை, கலாச்சார பண்பாடு பொறுப்பாளராகவும், ஜெர்மனி இயக்குநராகவும் தமிழருவி நயினை விஜயன் தெரிவு செய்யப்பட்டார். ஜெர்மனி பெண்கள் நலப்பிரிவுக்கு திருமதி இந்து தெய்வேந்திரம் தெரிவானார்.

ஆசிய ஒன்றியத் தலைவராக மல்லை சத்தியாவும் அயலக இலக்குநர்களாக மலேசியா அய்யாசாமி, அவுஸ்திரேலியா நந்திவர்மன், அமெரிக்காக் கண்டம் ராஜரத்தினம், ஆபிரிக்கா மிக்சி செட்டி இலங்கை கலாநிதி விந்தன் கனகரத்தினம், இந்தியா பேராசியர் மகாவிங்கம், மலேசியா மகேஸ்வரி, ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கல்விப் பொறுப்பாளர்களாக கனடா ராஜரத்தினமும் ஐரோப்பா சாம் விஜயனும் தேர்வு செய்யப்பட்டனர்.

மகளிர் பிரிவுக்கு மலேசியா மலர்விழி பொதுச்செயலாளராகவும், மலேசியா சந்திரா துணைப்பொதுச்செயலாளராகவும் தேர்வானார்கள். புதுச்சேரி பேராசிரியர் இளங்கோவனும் வசந்தா பதிப்பக உரிமையாளர் முனைவர் மோ.பாட்டழகனும் தேர்தல் அதிகாரிகளாக இருந்து சிறப்பாக பணியாற்றினர்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பொன்விழா 2024 ஆம் ஆண்டு தொடங்குவதை முன்னிட்டு மலேசியாவில் பெரிய அளவில் பொன்விழாவை கொண்டாடுவது என தலைவர் சண்முகம் அறிவித்தார்.







புதிதாக தேர்வு செய்யப்பட்ட பொறுப்பாளர்கள் அனைவரும் இந்த இயக்கத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கான ஆலோசனைகளை வழங்கினர்.

பொருளாளராக தேர்வு செய்யப்பட்ட சுந்தர்வேலு பேசும்போது இயக்கத்தின் நிதி ஆதாரத்தை பெருக்க சர்வதேச அளவில் கலைநிகழ்ச்சிகள் நடத்தலாம், தமிழ்மொழிக்காகவும், தமிழ்க்கலாசார வளர்ச்சிக்காகவும் உதவி செய்யும் தொழில் அதிபர்களிடம் உதவிகள் கேட்கலாம், இளைஞர்களையும், பெண்களையும் கூடுதலாக உறுப்பினர்களாக சேர்க்கலாம் என ஆலோசனை வழங்கினார்.

சர்வதேச அளவில் ஐம்பது ஆண்டுகளாக இயங்கி வரும் இந்த இயக்கத்தின் மீது சில வினாக்களையும் முன்வைக்க வேண்டியுள்ளது. இந்த ஐம்பது ஆண்டுகளில் ஏன் அதிகப்படியான உறுப்பினர்களை சேர்க்கவில்லை? நிதி ஆதாரத்தை ஏன்? பெருக்கவில்லை?இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் கூடுதலான வாய்ப்புகளை கொடுக்கவில்லையே ஏன்? இயக்கத்தின் செயல்பாடுகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல ஊடகப்பிரிவுக்கான பொறுப்பாளர்கள் இல்லையே, ஏன்?

இப்படி நிறைய வினாக்கள் இருந்தாலும் வருங்காலங்களில் வெறுமனே கூடிக்கலையும் இயக்கம் இல்லாமல் இன்னும் கூடுதல் செயல்பாட்டுடன் மேற்கண்ட வினாக்கள் எல்லாம் சரி செய்யப்பட்டு

உலகத் தமிழர்களின் வரவேற்பைப் பெற வேண்டும் என்ற கருத்தையும் பலர் முன்வைத்தனர்.

தமிழ்நாட்டிலிருந்து
**நந்தவனம் சந்திரசேகரன்...**

# ரஷ்யாவின் செந்தமிழ் அறிஞர் அலெக்சாண்டர் டுபியான்ஸ்கி

## அன்னார் மறைந்து மூன்றாண்டு நிறைவு

ரஷ்யப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியப் பேராசிரியரும், தமிழ்மொழி மீது மிகுந்த பற்றுக்கொண்டவரும், தமிழ் மொழியை சரளமாகப் பேசவும் கூடிய ரஷ்ய நாட்டுத் தமிழ் அறிஞர் அ லெக்சாண்டர் டுபியான்ஸ்கியின் மூன்றாண்டு நினைவு தினம் கடந்த 18. 11. 2023 அன்று அனுஷ்டிக்கப்பட்டது.

மொஸ்கோ அரசுப் பல்கலைககழகத்தின் தமிழ் இலக்கியப் பேராசிரியரான அவர், தமிழ்மொழி மீது மிகுந்த பற்றுக் கொண்டவராக விளங்கினார். தமிழ்மொழியை சரளமாகப் பேசவும் கூடியவராக ரஷ்ய நாட்டுத் தமிழ் அறிஞர் அலக்சாண்டர் டுபியான்ஸ்கி ( Prof. Alexander Dubyanskiy) விளங்கினார்.

ரஷ்யாவின் செந்தமிழ் அறிஞர் அலக்சாண்டர் டுபியான்ஸ்கி மறைவு தமிழ்கூறும் உலகிற்கு மிகப்பெரும் இழப்பாகும்.

மொஸ்கோ அரசுப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மற்றும் இந்திய இலக்கியப் பேராசிரியராக அவர் பணி புரிந்தவர். உலகின் பல்வேறு நாடுகளுக்கும் பயணித்து தமிழ்மொழி சார்ந்த நிகழ்வுகளில் பங்கேற்று தமிழ்மொழியின் சிறப்புகளை வெளிக்கொணர்ந்தவர்.

குறிப்பாக மேல்நாட்டு மொழியாய்வாளர்களிடையே தமிழ்மொழியின் இலக்கியப் பயன்பாட்டிற்கும், பேச்சு வழக்கிற்கும் இடையில் இருக்கும் வேறுபாடுகளை எடுத்தியம்புவதுடன், தமிழ்நாட்டு பேச்சுத் தமிழில் உரையாடவும் கூடியவர்.

## மேல்நாட்டு மொழி ஆய்வாளர்களிடையே தமிழ்மொழியின் சிறப்பை எடுத்தியம்பியவர்

மொஸ்கோ மாநில பல்கலைக்கழகத்தில் உள்ள இந்திய மொழியியல் துறையின் மிக முக்கியமான நிபுணத்துவ அறிஞர்களில் ஒருவராக அவர் பணியாற்றினார். மொஸ்கோவில் நவம்பர் 18, 2020 பேராசிரியர் அலெக்சாண்டர் மிகைலோவிச் டுபியான்ஸ்கி காலமானார்.

அலெக்சாண்டர் டுபியான்ஸ்கி இந்திய கலாசாரத்தில் அங்கீகரிக்கப்பட்ட மொழியியல் நிபுணத்துவம் கொண்டவர். தமிழ்மொழி மற்றும் இல க்கி யத்துறையில் முன்னணி வகித்தவர். அத்துடன் பல நூற்றுக்கணக்கான அறிவியல் கட்டுரைகளை வெளியிட்டவர்.



பல தலைமுறை மாணவர்கள் மற்றும் பட்ட தாரி மாணவர்களுக்கு பயிற்சி அளித்தவர். அவர்களில் பலர் முக்கிய விஞ்ஞானிகள், பத்திரிகையாளர்கள் மற்றும் இராஜதந்திரிகளாக இன்று விளங்குகிறார்கள்.

மொஸ்கோவில் 27 ஏப்ரல் 1941 இல் அவர் பிறந்தார். பாடசாலையில் பட்டம் பெற்ற பிறகு சோவியத் இராணுவத்தில் பணியாற்றினார். தமிழ்மொழி மீதுள்ள பற்றால் மொஸ்கோ மாநில பல்கலைக்கழக த்தில் மொழித்துறை நிறுவனத்தில் பணியாற்றினார்.

இந்திய மொழியியல்துறையில் நிபுணத்துவம் பெற்றதுடன் தென்னிந்திய இலக்கியம், பண்டைய மற்றும் இடைக்காலத் தமிழ் இலக்கியத்தையும் படித்தார். படிப்பை முடித்த பிறகு, அவர் தமிழ்த் துறையில் முதலில் பட்டதாரி மாணவராகவும், பின்னர் 1973 முதல் ஆசிரியராகவும், மூத்த விரிவுரையாளராகவும், இணைப்பேராசிரியராகவும் விளங்கினார்.



தமிழ் இலக்கிய ஆய்வாளர்:

பண்டைய தமிழ் இலக்கியத்தின் கவிதைகள் குறித்த தனது கலாநிதி பட்ட ஆய்வறிக்கையை அவர் வெற்றிகரமாக படைத்தார். அதன் பின்னர் நெதர்லாந்தில் ஆங்கிலத்தில் உள்ள ஆய்வுக் கட்டுரையின் அடிப்படையில் தனது படைப்புகளை வெளியிட்டார்.

இன்றும் திராவிடவியல் மற்றும் தமிழ் ஆய்வுத் துறைகளில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் இந்திய அறிவியலாளர்களால் இந்த ஆராய்ச்சி ஆய்வுகள் இன்னும் தீவிரமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

அலெக்சாண்டர் டுபியான்ஸ்கி 1978_79 இல் சென்னை பல்கலைக்கழகத்தில் தனது முதல் மொழிப் பயிற்சியைப் பெற்றார். பின்னர் அவர் அடிக்கடி இந்தியாவுக்குச் சென்று பல்வேறு அறிவியல் மாநாடுகளில் எண்ணற்ற முறை ஆய்வுரை ஆற்றினார்.

அலெக்சாண்டர் மிகைலோவிச் டுபியான்ஸ்கி கொண்டிருந்த திறமைகள் அவரது முக்கிய தொழில்முறை செயல்பாட்டின் நோக்கத்துடன் மட்டுப்படுத்தப்படவில்லை. அவர் ஒரு சிறந்த இசைக்கலைஞராக இருந்தார். மொஸ்கோ அரசுப் பல்கலைக்கழக த்தில் அவரது பங்கேற்புடன் நடந்த இசை நிகழ்வுகளை பலரும் நினைவில் கொள்கிறார்கள்.

அலெக்சாண்டர் மிகைலோவிச் எப்போதும் தனது சகாக்களுக்கு உதவத் தயாராக இருப்பவர். மிகவும் பிரகாசமான, எப்போதும் கனிவான வார்த்தைகளால் ஆலோசனை கூறும் பேராசான். அவர் தனது உண்மையான வரம்பற்ற அறிவை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொள்வதில் எப்போதும் மகிழ்ச்சியாக இருந்தார்.

எப்போதும் நட்புடன் இருந்த அவர், சிறந்த நகைச்சுவை உணர்வைக் கொண்டிருந்தவர். மேலும் அவரது வேடிக்கையான, விகடமான கதைகள் பெரும்பாலும் சோகமான சூழ்நிலைகளில் சக ஊழியர்களின் மனநிலையை உயர்த்தியது.

உலகின் பல்வேறு நாடுகளுக்கும் பயணித்து தமிழ்மொழி சார்ந்த நிகழ்வுகளில் பங்கேற்று தமிழ் மொழியின் சிறப்புகளை வெளிக்கொணர்ந்த அலெக்சாண்டர் மிகைலோவிச் டுபியான்ஸ்கி,

மேல்நாட்டு மொழி ஆய்வாளர்களிடையே தமிழ்மொழியின் இலக்கியப் பயன்பாட்டிற்கும், பேச்சு வழக்கிற்கும் இடையில் இருக்கும் வேறுபாடுகளை எடுத்தியம்பிய பெருமைக்கு உரியவர்.

தமிழ்நாட்டு பேச்சுத்தமிழில் சரளமாக உரையாடவும் கூடிய வல்லமை கொண்ட அவரின் மறைவு தமிழ்கூறும் உலகிற்கு மிகப்பெரும் இழப்பாகும்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# பாடசாலைகளின் வளர்ச்சியில் அக்கறை செலுத்தும் நெடுங்கேணி பிரதேசக் கல்வி அபிவிருத்திச் சங்கம்

'நெடுங்கேணி பிரதேசக் கல்வி அபிவிருத்திச் சங்கம் கடந்த ஆறு ஆண்டுகளாக அப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் மிகவும் பாராட்டுக்குரியன. பிரித்தானியாவில் வாழும் நெடுங்கேணி பிரதேச மக்களும் ஏனைய நலன்விரும்பிகளும் ஒருங்கிணைந்து, தாயகத்தில் தம் பிரதேச நலனை முன்னெடுப்பதில் காட்டிவரும் அக்கறையைப் பாராட்டுகிறேன். கடந்த இருபது ஆண்டுகளாக பிரித்தானியாவில் மருத்துவராகப் பணியாற்றி வரும் அனுபவத்திலிருந்து, நெடுங்கேணிப் பிரதேசத்தின் சுகாதார, மருத்துவ வசதிகளிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்'.

இவ்வாறு கடந்த ஒக்டோபர் 28 ஆம் திகதி சனிக்கிழமை லண்டன் உயற்குன்று முருகன் ஆலய மண்டபத்தில் நெடுங்கேணிக் கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டுவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய வைத்திய கலாநிதி ஜெய்சன் விவேகானந்தராஜா தனது சிறப்புரையில் தெரிவித்தார்.

'கடந்த முப்பது ஆண்டுகால யுத்தத்தால் பேரிழப்புகளைச் சந்தித்த நெடுங்கேணிப் பிரதேசம் இன்று சமூக வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் பெரும் சவால்களைச் சந்தித்து வருகிறது. கல்வி, தொழில், குடும்பநலன் போன்ற விடயங்களில் ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை மேற்கொள்ள பிரித்தானியாவாழ் நெடுங்கேணிப் பிரதேச நலன்விரும்பிகள் ஒன்றிணைந்து உதவ முன்வரவேண்டும்' என்று நெடுங்கேணிப் பிரதேசக் கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளர் செ.கருணாகரன் தனதுரையில் வேண்டுகோள் விடுத்தார்.





## லண்டனில் நடைபெற்ற ஆண்டுவிழா

'நெடுங்கேணிப் பிரதேசத்தின் ஆரம்பநிலைக் கல்வியை முன்னேற்றும் செயற்பாடுகளிலும் ஆங்கிலமொழி அறிவினை மேம்படுத்தும் திட்டத்திலும் சில அடிப்படைச் செயற்பாடுகளில் ஒத்துழைப்பினை வழங்குவோம்' என்று வடமாகாண முன்பள்ளிச் சம்மேளனத்தின் இயக்குனர் சசசிதானந்தன் தெரிவித்தார்.

நெடுங்கேணி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கக் காப்பாளர் திருமதி தமிழரசி அன்பழகன் 'நெடுங்கேணி இளங்கதிர் 2023' ஆண்டுமலரை அறிமுகப்படுத்தி உரையாற்றியபோது, "கடந்த ஆண்டு நெடுங்கேணி மகாவித்தியாலயத்திலிருந்து பதினொரு மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லுமளவிற்கு எங்கள் பாடசாலை வளர்ந்து வருவதில் நாம் பெருமை அடைகிறோம். நெடுங்கேணியுடன் ஊஞ்சார்கட்டி, மருதோடை, பழம்பாசி, ஆயிலடி ஆகிய கிராமப் பாடசாலைகளின் வளர்ச்சியிலும் நாம் அக்கறை கொண்டுள்ளோம். பல்கலைக்கழகத்தில் நமது மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரவும் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கவும் எமது சங்கம் உதவி வருகிறது" என்று குறிப்பிட்டார்.

நெடுங்கேணிப் பிரதேசக் கல்வி அபிவிருத்திச் சபை ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி கலாநிதி ச.பரமலிங்கம் ஆண்டுமலரை வெளியிட்டுவைத்துப் பேசுகையில், "வவுனியா வடக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் எழுபது ஆயிரம் ஏக்கர் நிலத்தை கரும்புப் பயிர்ச் செய்கைக்காக அந்நிய கம்பனிகளுக்குக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்கான செய்திகள் எமக்குப் பெருங் கவலை அளித்தன. கடந்த 75 ஆண்டுகளாக வடக்கு, கிழக்கு மக்கள் அனுபவித்த அட்டூழியங்களில் ஒன்று நிலஅபகரிப்பிற்கு உட்பட்டமையாகும். உள்ளூர்த் தேசிய வளத்தின்மீது வன்னி மக்களுக்குரிய உரிமை பறித்தெடுக்கப்படுவது அடிப்படை மனித உரிமைமீறலாகும்" என்று தெரிவித்தார்.

'கலைவளம் மிக்க வன்னிப் பிரதேசத்தின் வாய்மொழி வழக்காறுகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்' என்று திருமதி சுகந்தி தமிழ்வாணன் குறிப்பிட்டார்.

இலக்கிய விமர்சகர் மு.நித்தியானந்தன் 'நெடுங்கேணி இளங்கதிர் 2023' ஆண்டுமலரை மதிப்பீடு செய்து உரையாற்றுகையில் , "சிறந்த ஆய்வேடாகவும், குரலற்றோர் குரலாகவும், நெடுங்கேணி மகாவித்தியாலயத்தின் செயற்பாட்டுத் தளமாகவும் திகழும் இம்மலர் பேராசிரியர் இர.சிவச்சந்திரன், கலாநிதி ச.பரமலிங்கம், கலாநிதி பாலசுந்தரம் இளையதம்பி, நெடுங்கேணி சானுஜன், திருமதி விமலா ரவீந்திரன், சுகந்தி தமிழ்வாணன் ஆகியோரின் தரமான ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்திருப்பது சிறப்புக்குரியது. பின்தங்கிய பிரதேசம் ஒன்றின் மேம்பாட்டிற்காக பிரித்தானியாவாழ் நெடுங்கேணி மக்கள் காட்டிவரும் அக்கறை பாராட்டிற்குரியது. 'நெடுங்கேணி இளங்கதிர்' நெடுங்கேணிப் பிரதேசத்தின் வளங்கள், சூழல் பேணுகை, நிலப்பயன்பாடு, வாழ்க்கைத்தரம், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, பொருளாதாரக் கட்டுமானங்கள், வரலாறு, கலை, இலக்கியம் போன்ற அனைத்து அம்சங்களையும் பற்றிய கட்டுரைகளைத் தாங்கி வரவேண்டும்" என்று தெரிவித்தார்.

வீணை, இசை, நடன நிகழ்ச்சிகளுடன், இராப்போசனத்துடன் விழா நிறைவுற்றது.

# சபரிமலை ஐயப்பன் கோயிலில் அலைமோதும் பக்தர்கள் கூட்டம்!



சபரிமலை ஐயப்பன் கோயிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதி வருகிறது. பக்தர்களின் வசதிக்காக தரிசன நேரம் தினமும் 16 மணிநேரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதிகாலை 3 மணிக்கு திறக்கப்பட்டு இரவு 11 மணி வரை பக்தர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

சபரிமலை ஐயப்பன் கோயில் நடை கார்த்திகை மாதப் பிறப்பு மற்றும் மண்டல பூஜைக்காக கடந்த 16 ஆம் திகதி திறக்கப்பட்டது. இதையடுத்து பக்தர்கள் மாலை அணிந்து 41 நாட்கள் விரதத்தை தொடங்கினர்.

17ஆம் திகதியில் இருந்தே சபரிமலை ஐயப்பன் கோயிலில் பக்தர்களின் கூட்டம் அதிகமாக உள்ளது. குறிப்பாக இந்தியாவின் தென்மாநிலங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் சபரிமலையில் ஐயப்பனை தரிசனம் செய்வதற்காக குவிந்து வருகின்றனர். 5 நாட்களில் இரண்டரை இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் ஐயப்பனை தரிசனம் செய்துள்ளனர். சன்னிதானம் நடைப்பந்தல், பம்பை உள்ளிட்ட இடங்களில் எங்கு பார்த்தாலும் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது.

தினமும் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து தரிசனம் செய்து வருகின்றனர். பக்தர்களின் கூட்டம் அதிகரித்துள்ளதால் திருவிதாங்கூர் தேவசம்போர்ட் தரிசன நேரம் குறித்து முக்கிய முடிவை எடுத்துள்ளது. ஐயப்பனை தரிசனம் செய்வதற்கான நேரம் 16 மணிநேரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதே அந்த முடிவு. அதன்படி சபரிமலை ஐயப்பன் கோயில் நடை அதிகாலை 3 மணிக்கு திறக்கப்பட்டு, சுப்ரபாத சேவை மற்றும் நெய்யபிஷேகத்திற்குப் பிறகு தரிசனங்கள் தொடங்கப்படும்.

பின்னர் பிற்பகல் 1 மணிக்கு தரிசனம் நிறுத்தப்படும். அதன்பிறகு மாலை 4 மணிக்கு மீண்டும் தரிசனம் தொடங்கப்பட்டு இரவு 11 மணி வரை பக்தர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். அதனைத் தொடர்ந்து ஹரிவராசனம் பாடல் இசைக்கப்பட்டு பின்னர் நடை அடைக்கப்படும்.

பொதுவாக சபரிமலை ஐயப்பன் கோயில் மாதாந்த பூஜைகள் மற்றும் விசேஷ நாட்களில் காலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு பிற்பகல் 1 மணிக்கு மூடப்படும். பின்னர் மீண்டும் மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை பக்தர்கள் தரிசனத்துக்காக அனுமதிக்கப்படுவார்கள். தற்போது தரிசன நேரத்தை அதிகரித்துள்ளதால் பக்தர்கள் காத்திருக்கும் நேரம் குறைந்துள்ளது.



## தரிசன நேரம் 16 மணித்தியாலமாக அதிகரிப்பு

கூட்ட நெரிசலில் சிக்காமல் கூடுதல் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய முடிகிறது. அதிகாலை 3 மணிக்கே தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுவதால் 4 மணிக்கு பக்தர்கள் மலை இறங்கி வருகின்றனர். சபரிமலை ஐயப்பன் கோயிலில் மண்டல பூஜை எதிர்வரும் டிசம்பர் 27 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. அதன்பிறகு கோயில் நடை மூன்று நாட்கள் மூடப்பட்டு மகர விளக்கு பூஜைக்காக டிசம்பர் 30 ஆம் திகதி திறக்கப்படும். மகர ஜோதி தரிசனம் ஜனவரி 15 ஆம் திகதி நடைபெற உள்ளது.

பின்னர் படிபூஜை முடிந்து ஜனவரி 20 ஆம் திகதி சபரிமலை ஐயப்பன் கோயில் நடை மூடப்படும். சபரிமலை ஐயப்பன் கோயிலில் மண்டல மற்றும் மகர விளக்கு பூஜைக்காக திருவிதாங்கூர் தேவசம்போர்ட் மற்றும் கேரள அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. பக்தர்களின் பாதுகாப்புக்காக 13 ஆயிரம் பொலிசார் 6 கட்டங்களாக பணியில் ஈடுபட்டுள்ளனர். மகர விளக்கு பூஜையை முன்னிட்டு அரக்கோணத்தில் இருந்து 60 பேர் அடங்கிய பேரிடர் மீட்புக் குழுவினரும் சபரிமலைக்கு சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அநுராதபுரம் மாவட்டத்தில் வறிய குடும்பங்களுக்கு உதவித்திட்டங்கள்

அநுராதபுரம் மத்திய நுவரகம் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட 40 கிராம அலுவலர் பகுதிகளிலும் டெப் லிங் (Deaf Link) தனியார் நிறுவனத்தினால் பல்வேறு செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அநுராதபுரம், மன்னார் ஆகிய இரு மாவட்டங்களிலும் பரந்தளவிலான பணிகளை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. இன, மத பேதமின்றி அதன் பணிகளை இந்நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

அரச அதிகாரிகளின் அங்கீகாரத்துடன் வைத்திய முகாம்கள் உட்பட பல்வேறு பணிகளை இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது. வைத்திய முகாம்கள் மூலம் இனங்காணப்படும் சகல நோய்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. முதியோர்களுக்கு மூக்குக் கண்ணாடி, சக்கர நாற்காலி மற்றும் ஊன்றுகோல் என்பவற்றை இந்நிறுவனம் வழங்கியுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக பல செயற்திட்டங்களை குறித்த நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. இதன் மூலம் மத்திய நுவரகம் பிரதேச செயலகப் பகுதியில் பல்வேறு குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் ஆர்.எம்.ஜீ. சேனாரத்ன தெரிவித்தார்.

பொதுமக்கள் பொருளாதார நிர்க்கதிக்குள்ளாகியுள்ள இவ்வேளையில் தனியார் நிறுவனமொன்று இவ்வாறு செயல்பட்டு வருவது பாராட்டுக்குரியதாகும்.







எதிர்வரும் காலத்திலும் பல்வேறு பணிகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், கடந்த காலங்களில் சிறுவர் தினம் , முதியோர் தினம் உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் மிக விமரிசையாக கொண்டாடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

எதிர்வரும் காலத்தில் புதிய செயல்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும், செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கு கிராமங்களுக்கு செல்லும் போது பொதுமக்கள் பாரிய பங்களிப்பை வழங்கி வருவதாகவும், வணக்கஸ்தலங்களின் பிரதிநிதிகள் மற்றும் பாடசாலை அதிபர்கள் தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுப்பதாகவும் நிறுவனத்தின் இணைப்பாளர் ஜெயவூலா ஜெயகுணரூபன் தெரிவித்தார்.

குறித்த நிறுவனத்தின் செயல்திட்டம் தொடர்பில் அனுராதபுரம் மாவட்ட ஊடகவியலாளர்களை தெளிவூட்டும் செயலமர்வு அநுராதபுரம் கிரெஸ்டன் பார்க் உணவகத்தில் மத்திய நுவரகம் பிரதேச செயலாளர் ஆர்.எம்.ஜீ. சேனாரத்னவின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது. அதன் போது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள பணிகள் தொடர்பில் அங்கு விளக்கமளிக்கப்பட்டது.

**மதார் தம்பி ஆரிப்...**
(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# உலக நடப்புகளை நம் இல்லத்தினுள் நேரில் கொண்டுவந்து சேர்த்த அறிவியல் சாதனம்!

உலக தொலைக்காட்சி தினம் (World Television day) ஒவ்வொரு வருடமும் நவம்பர் 21ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. தொலைக்காட்சியின் முக்கியத்துவம் இத்தினத்தில் எடுத்துச் சொல்லப்படுகிறது.

1996 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற அனைத்துலகத் தொலைகாட்சிக் கருத்தரங்கின் விதந்துரைப்பின்படி ஐக்கிய நாடுகள் சபை நவம்பர் 21ஆம் திகதியை உலகத் தொலைக்காட்சி தினமாக அறிவித்தது. இதன்படி முதல் தொலைக்காட்சி தினம் 1997 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதி கொண்டாடப்பட்டது.

உலகின் தொழில்நுட்ப வளர்ச்சியின் பரிமாணத்தில் பல்வேறு மின்சாதனப் பொருட்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. அந்த வகையில் மனிதனை ஓரிடத்திலிருந்து உலகில் மூலை முடுக்கெங்கும் கொண்டு சென்று காட்சிகளை கண்முன்னே காட்டுவதே தொலைக்காட்சி ஆகும்.

தொலைக்காட்சி கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து இப்பொழுது வரை மனிதனுக்கு முக்கியத்துவம் வாய்ந்த சாதனங்களில் ஒன்றாக நிலைபெற்றுள்ளது. பாமர மக்கள் முதல் படித்தவர்கள் வரை அனைவரையும் தன்பால் ஈர்த்து அவர்கள் இலகுவில் அணுகக்கூடிய ஒரே தொலைத்தொடர்புச் சாதனங்களில் தொலைக்காட்சிதான் முன்னிலை வகிக்கின்றது.

1920 ஆம் ஆண்டு ஜோன் லொகி பெயாட் தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தார். அன்று முதல் இன்றுவரை பல்வேறு தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு ஈடுகொடுத்து தொலைக்காட்சி பல பரிமாணங்களைக் கொண்டதாக உருவாக்கப்பட்டு வருகிறது. மக்களின் வாழ்க்கையுடன் ஒன்றிணைந்த சாதனமாக விளங்கும் தொலைக்காட்சி உலகையே ஆட்சி செய்யும் தொலைத்தொடர்பு சாதனமாக உருவெடுத்துள்ளது.

இன்றைய காலகட்டத்தில் ஊடகத்துறையில் மிகவும் செல்வாக்குமிக்க சாதனமாக தொலைக்காட்சி காணப்படுகிறது. அதனூடாக வெளியிடப்படும் புகைப்படங்கள், காணொளிகள், புதிய ஆலோசனைகள் மற்றும் வடிவமைப்பு போன்றவை மக்களை அதிகளவில் கவர்கின்றன. தகவல் மற்றும் தொலைத்தொடர்புத்துறையின் மிகவும் குறிப்பிடத்தக்க ஊடகமாக தொலைக்காட்சி வளர்ச்சியடைந்துள்ளது. அதற்கான ரசிகர்களும் உலகளாவிய ரீதியில் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

சமூக வேறுபாடு, வயது வேறுபாடு மற்றும் தேசிய வேறுபாடு ஆகியவற்றைக் கடந்து அனைவர் மத்தியிலும் பொதுவான விருப்பத்திற்கு உரிமையுடைய சாதனமாக தொலைக்காட்சி காணப்படுகிறது. தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் காணொளிகளைப் புரிந்துகொள்வதற்கு மேலதிக அறிவு தேவையில்லை. இதனால் கல்வியறிவு குறைந்தவர்களும் அதனை பயன்படுத்துவதில் ஆர்வம் செலுத்துகின்றனர்.

பலம் மிக்க சாதனமாக தொலைக்காட்சி காணப்படுகிறது. கருத்துச் சுதந்திரத்தை மேம்

## World Television day




படுத்தல், ஆற்றல்களை வெளிப்படுத்தல், பல்துறை அறிவூட்டுதல் போன்ற பயன்களை தொலைக்காட்சி வழங்குகின்றது.

உலகில் இடம்பெறும் வன்முறைகள் மற்றும் கலாசார சீர்கேடுகள் என்பன தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் சாதனமாக தொலைக்காட்சி பயன்படுத்தப்பட வேண்டுமென்பதே யுனெஸ்கோவின் கருத்தாகும். இதன்மூலம் சிறுவர்கள் மாத்திரமன்றி இளைஞர்களையும் தெளிவுபடுத்த முடியுமென யுனெஸ்கோ கூறுகின்றது.

தொலைக்காட்சி புரட்சிக்கு 1925 இல் வித்திட்டவர் இங்கிலாந்து நாட்டின் ஜோன்லொகி பெயாட் என்ற அறிவியலாளர் ஆவார். 27.01.1926 இல் தான் கண்டறிந்த கருவியைபுகழ்பெற்ற அறிவியல் அறிஞர்கள் மத்தியில் அவர் இயக்கிக் காட்டினார்.

அவரைத் தொடர்ந்து விஞ்ஞானிகள் பலரும் ஆராய்ச்சியில் ஈடுபட்டதன் விளைவாக, 1936 ஆம்ஆண்டு இங்கிலாந்து நாட்டில் தொலைக்காட்சியில் கறுப்பு வெள்ளை ஒளிபரப்பு நடைமுறைக்கு வந்தது.

Television என்பதற்கு தமிழில் படரேடியோ, வானொளி என்று பெயர்கள் பரிசீலிக்கப்பட்ட நிலையில், இச்சொல் தொலைவில் உள்ளதை காண்பது என்ற பொருள் தந்ததால், தொலைக்காட்சி என்பதே நிலைபெற்றது.

உலக நிகழ்வுகளை வீடுகளுக்குள் கொண்டுவந்து காட்சிப்படுத்திய, தொலைக்காட்சிகளின் ஒளிபரப்பானது அன்டெனாவில் தொடங்கி, தற்போது டிஷ், கேபிள், இணையம் என பல்வகை ஊடகங்களில் நிலைபெற்று விட்டது.

அறிவியலானது தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கேற்ப நெகிழ்வுதன்மையுடன் காணப்படுவதால், ஒளிபரப்பு பல்வகை ஊடகங்களுக்குள் ஊடுருவி நிலை நிறுத்திக் கொண்டுள்ளது.சிறியபெட்டிவடிவில்கறுப்பு வெள்ளை திரையுடன் தயாரிக்கப்பட்டு, பின்னர் பெரிய அளவிலும், வண்ணத்திரையுடனும் தயாரிக்கப்பட்டு, 20 ஆண்டுகளுக்கு மேலாக காட்சியளித்த தொலைக்காட்சிகள், 2010 இற்குப் பிறகு எல்.இ.டி, எல்.சி.டி என அதிநவீன தொழில்நுட்பத்தில் சிறியது முதல் பெரிய திரைகளுடன்தயாரிக்கப்பட்டு, வீடுகளை அலங்கரித்து வருகின்றன.

திரையரங்கத்தின் திரையைப் போன்ற பிரமிப்பை ஏற்படுத்தும், பிரம்மாண்ட திரை கொண்ட தொலைக்காட்சிகளும் தற்போது தயாரிக்கப்படுகின்றன. அதேநேரத்தில் ஆரம்ப காலத்தில் பயன்படுத்தி வந்த பெட்டியைப் போன்ற தொலைக்காட்சிகள் பெட்டிகளில் பெரும்பாலும் விடைபெற்று விட்டன.

தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களின் வருகைக்குப் பிறகான காலகட்டத்தில் ஏற்பட்ட போட்டியானது நிகழ்ச்சிகளையும், செய்திகளையும் மக்களுக்கு அதிகளவில் கொண்டு சேர்க்கத் தொடங்கியது. நாள்தோறும் சில மணி நேரங்கள் மட்டுமே அளிக்கப்பட்ட ஒளிபரப்பானது, பின்னாளில் 24 மணி நேரமாக மாறி நிற்கிறது. 24 மணி நேர செய்தித் தொலைக்காட்சிகள் பெருகி விட்டன.

இணையம் என்ற ஊடகத்தின் வழியாகவும் பல்வேறு அலைவரிசைகளைக் காணும் வாய்ப்பை இன்று நாம் பெற்றுள்ளோம்.

தொலைக்காட்சிகளில் பல்சுவை நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டாலும், செய்தி ஏற்படுத்தும் தாக்கம் மற்றைய நிகழ்ச்சிகளைப் பின்னுக்குத் தள்ளிவிடுகிறது.

தொலைக்காட்சி தொடர்பான தொடர் ஆராய்ச்சியில் ஈடுபட்ட அமெரிக்கர்கள், 1953 ஆம் ஆண்டு தொலைக்காட்சியில் வண்ண ஒளிபரப்பைத் தொடங்கினர். இதன் மூலம் உலக நாடுகளில் தொலைக்காட்சியில் வண்ண ஒளிபரப்பைத் தொடங்கிய முதல் நாடு என்ற பெருமையை அமெரிக்கா பெற்றது.

நாம் நேரில் காணமுடியாத சம்பவங்களைக் கூட கண்டுகளித்திட தொலைக்காட்சி உறுதுணையாக விளங்குகின்றது என்பது மறுக்க முடியாததாகும்.

# இன்றைய பலன்கள்




**( 25. 11. 2023 )**

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா


(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)

**மேஷம்:**




பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றமும் ஏற்படும். நீண்ட நாளாக வரவேண்டிய பணம் தற்போது வந்து சேரும்.

**ரிஷபம்:**



எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும். தங்க நகை ஆபரணச் சேர்க்கை உண்டு. பூர்வீக சொத்தால் ஆதாயம் உண்டு.

**மிதுனம்:**



பேச்சில் அதிக கவனம் தேவை. தாயால் அனுகூலமான பலன்கள் ஏற்படும். வீடு வாகனம் சொத்து தொடர்பான விஷயங்கள் சாதகமாக அமையும்.

**கடகம்:**



எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும். தங்க நகை ஆபரணச் சேர்க்கை உண்டு. உறவுகளால் மனக்கசப்புகள் வந்து நீங்கும்.

**சிம்மம்:**




உறவுகளால் பிரச்சினைகள் வந்து நீங்கும். வீடு வாகனம் சொத்து தொடர்பான செலவினங்கள் உண்டு.

**கன்னி:**



வீடு வாகனம் சொத்து தொடர்பான செலவினங்கள் உண்டு. குழந்தைகளின் செயல்கள் பெருமைப்படக்கூடியதாக இருக்கும் .

**துலாம்:**



உடன்பிறப்புகளால் ஆதாயம் உண்டு. பயணங்களால் மகிழ்ச்சி உண்டு. தாயால் அனுகூலமான பலன்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:**




வாழ்க்கைத் துணைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் உறவினர்களிடம் கௌரவம் அதிகரிக்கும்.

**தனுசு:**




கடன் பிரச்சினைகள் தீரும் பயணங்களின் போதும், வாகனத்தில் செல்லும் போதும் ஆவணங்களை கவனமாக வைத்துக் கொள்ளுங்கள்.

**மகரம்:**



வாகனம் பழுது ஏற்படக்கூடிய சூழல் உருவாகும். குழந்தைகள் உடல் நலனில் கவனம் தேவை. குழந்தையின் நட்பு வட்டத்தை கண்காணிப்பில் வைத்துக் கொள்வது நல்லது.

**கும்பம்:**



எடுக்கும் முயற்சிகளில் தடை வந்தாலும் விடா முயற்சி வெற்றி தரும். தைரியத்தையும் தன்னம்பிக்கை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**மீனம்:**



பங்கு சந்தையில் இலாபம் அதிகரிக்கும். கணவன் மனைவிக்குள் அன்பும் ஆதரவு அதிகரிக்கும்.

## வெளிநாட்டுக்கு அதிகளவில்...

இலங்கை பிரஜை ஒருவரிடமிருந்து முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் தெரிவித்த குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணையை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் இந்தக் கடத்தல் தொடர்பாக துரித விசாரணை நடத்தி, சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் உயர் நீதிமன்ற நீதவான் பிரசன்ன அல்விஸ் தெரிவித்துள்ளார்.

## இரண்டு அமைச்சுகளுக்கு...

வலுசக்தி அமைச்சின் செயலாளராக மாபா பத்திரணவும் சுகாதார அமைச்சின் செயலாளராக மருத்துவர் பாலித குணரத்ன மஹிபாலவும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவால் வெளியிடப்பட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, கடந்த 21ஆம் திகதி முதல் எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதிவரை ஒருமாதத்துக்கு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளராக மாபா பத்திரண பணியாற்றுவார். அத்துடன், கடந்த 20ஆம் திகதி முதல் ஒருவருட காலத்துக்கு சுகாதார அமைச்சின் செயலாளராக மருத்துவர் பாலித குணரத்ன மஹிபால பணியாற்றுவாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரயில் ஆசன முன்பதிவுகளுக்கு...

ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. ஆசன முன்பதிவு ரயில்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் மிக எளிதாக தெரிந்துகொள்ளும் வகையில் ரயில் பெட்டிகளினுள் சென்று பார்க்கும் திறன், இருக்கை முன்பதிவுக் கட்டணம், ரயில் பெட்டிகளின் புகைப்படங்கள், இருக்கை வகைகள், இருக்கை எண்கள், இருக்கை முன்பதிவு வழிமுறைகள் போன்றவை இந்தச் செயலினியூடாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறையிலும் காணொளிகள், காட்சிகள், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் மற்றும் ரயில் அட்டவணை போன்ற பல தகவல்களை சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் எளிதில் அணுகக்கூடிய வகையில் இந்த செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமின்றி, கையடக்கத் தொலைபேசி செயலி மூலம் நேரலையாக ரயில் இருப்பிடம், நேரலை தாமதம் மற்றும் வரவிருக்கும் நிலையங்களுக்கான எதிர்பார்க்கப்படும் வருகை நேரம், நேரலை செய்திகள் உள்ளிட்ட பல ரயில் தொடர்பான சேவைகளையும் இதனூடாக பெறலாமெனவும், ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

## 06 மின் உற்பத்தி திட்டங்களை...

தெரிவித்தார். மட்டக்களப்பு, ஓட்டமாவடி மின் உற்பத்தித் திட்டமும் இதில் உள்ளடங்குவதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் மாதம்வரையான காலப்பகுதியில் மாத்திரம் மின்சார சபை 12 பில்லியன் ரூபா நட்டம் அடைந்ததாகவும் இலாபம் அடைந்தால் அதன் பயனை மக்களுக்கு நிட்சயம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுக்கான செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## சந்தேகநபர்கள் ஐந்து பேரையும்...

நேற்று நடைபெற்றது. வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இந்த இளைஞர், தாக்குதலுக்கு இலக்காகி சிறுநீரகம் பாதிக்கப்பட்டு, அதனாலேயே மரணம் சம்பவித்ததாக யாழ். நீதவான் நீதிமன்றத்தில் யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி உ.மயூரதன் சாட்சியமளித்துள்ளார். நாகராசா அலெக்ஸ் என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்ததுடன், கடந்த திங்கட்கிழமை இவரது உடற்கூற்று பரிசோதனை யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட போது , நீதவான் நேரில் சென்று சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிசோதனை தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

தொடர்ந்து யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு சென்று , சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் உத்தியோகத்தர்களிடமும் வாக்குமூலம் பெற்றிருந்தார்.

## டயானா கமகேயின்...

டயானா கமகே தாக்கல் செய்த வழக்கை பரிசீலித்த கொழும்பு பிரதான மாவட்ட நீதிபதி சந்துன் விதான இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்த வழக்கு மீண்டும் பெப்ரவரி 12ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

மட்டக்குளி ஹம்சா கல்லூரி மாணவர்களுக்கு

# ஜனனம் அறக்கட்டளை நடத்திய பட்டறை







(ஏ.சீ.றியாஸ்)

கலாநிதி ஜனகனின் எண்ணக் கருவில் உருவான ஜனனம் அறக்கட்டளையின் கல்விக்கு கரம் கொடுப்போம் செயற்றிட்டத்தின் கீழ் ''போதையற்ற இளம் சமூகத்தினரை உருவாக்குவோம்'' என்ற தொனிப் பொருளில் கொழும்பு, மட்டக்குளி ஹம்சா கல்லூரியில் பயிலும் 10, 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வூட்டும் ஒரு நாள் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

இப்பயிற்சிப் பட்டறை கல்லூரி வளாகத்தில் பிரதி அதிபர் ஆர். கனக சந்திரிகா தலைமையில் இடம் பெற்றது. இப்பயிற்சிப்பட்டறையில் வளவாளர்களாக ஆயிஷா ஹசன், அஸ்ரா இஸ்மாயில் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிப்பட்டறையை நடத்தினார்கள். பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றிய பாடசாலை மாணவர்களுக்கு ஜனனம் அறக்கட்டளையின் தலைவரும் ஐடிஎம் நேசன் கெம்பஸ் சர்வதேச கல்வி நிறுவனத்தின் தவிசாளருமான கலாநிதி வி.ஜனகன் சான்றிதழ்களை வழங்கி வைத்ததுடன் மாணவர்களுக்கு அறிவுரைகளையும் வழங்கி உரையாற்றினார்.

## ஸ்கை விருது விழாவில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் அதிதி

*கத்தாரில் மிக பிரம்மாண்டமாக நடைபெறவுள்ள இலங்கை மற்றும் இந்திய கத்தார் வாழ் ஆளுமைகளை கௌரவிக்கும் ஸ்கை தமிழ் விருது 2023 ஆனது எதிர்வரும் நவம்பர் 30ஆம் திகதி ஸ்கை தமிழ் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித்தின் தலைமையில் இந்திய கலாசார மையம் அசோகா ஹோலில் நடைபெறவுள்ளது.*

*இவ்விருது விழாவில் பிரதம அதிதியாக கத்தார் நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் மபாஸ் மொஹிதீனும் கௌரவ அதிதியாக இந்திய கலாச்சார மையத்தின் பொதுச் செயலாளர் மோகன் குமாரும், சிறப்பு விருந்தினராக இலங்கையிலிருந்து இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமரும், இந்தியாவில் இருந்து தி.மு.க கழக சட்ட திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா சந்திரசேகரனும், இந்தியா சேது தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் தலைவர் முஹம்மது ஜலீலும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.*

***தகவல்: கட்டாரில் இருந்து ராஜு ராஜயோகன்***

## அரசியலமைப்பு பேரவை குறித்து...

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அவர் ஏன் அவ்வாறு செயற்படுகின்றார் என தமக்குப் புரியாதுள்ளது என்றும் அவர் சபையில் குறிப்பிட்டார். அதேவேளை, காலிமுகத்திடல் போராட்டத்துக்கு தமிழ் புலம்பெயர் அமைப்புகளுக்கு மிடையில் எந்தவித தொடர்புகளுமில்லை என்றும் யாழ்ப்பாணத்தில் ஆயிரம் பேரை ஒன்று சேர்க்க முடியாத எமக்கு, இங்கு எவ்வாறு இந்தளவானோரைக் கூட்ட முடியுமென அவர்களே கூறினர் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். பாராளுமன்றத்துக்கு நேற்று வருகை தந்து சபையில் உரையாற்றிய ஜனாதிபதி, அரசியலமைப்பு பேரவை விவகாரம், காலி முகத்திடல் போராட்டம் மற்றும் அதன் பின்னர் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பிலும் சபைக்கு தெளிவூட்டினார்.பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுக்கான செலவுத்தலைப்பு மீதான விவாதத்தின் போது விசேட கூற்றை முன்வைத்தே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த ஜனாதிபதி, "அரசியலமைப்பு பேரவை நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதி என நான் தெரிவித்தபோது அது தொடர்பாக சபையில் முரணான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக சுமந்திரன் எம்.பி அதற்கு மாறான கருத்துக்களை தெரிவித்தார். ஆனால் அரசியலமைப்பு பேரவை நிறைவேற்று அதிகாரிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பது அரசியலமைப்பின் 17ஆம் திருத்தத்தின் வழக்குத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்கவே அரசியலமைப்பு சபையை நாம் ஏற்பாடு செய்தோம். அதேபோன்று 2002 இல் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையிலான 07 நீதியரசர்கள் குழாம் வழங்கிய தீர்ப்பு உள்ளது. அதன் பிரகாரமே தற்போது நாம் செயற்படுகின்றாமே. அரசியலமைப்பு பேரவை நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதி என அன்று சுமந்திரன் எம்.பி நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார். ஆனால் இன்று பாராளுமன்றத்தில் அவ்வாறில்லை என தெரிவிக்கின்றார். அத்துடன் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்பது தொடர்பாக சட்டத்தரணிகள் சங்கத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளதாக அவர் சபையில் தெரிவித்திருந்தார்.எனினும் சட்டத்தரணிகள் சங்கத்துடன் நான் அது தொடர்பில் எந்த சந்தர்ப்பத்திலும் கலந்துரையாடவில்லை. அத்துடன் அவர்களுடன் எந்த ஒப்பந்தமும் மேற்கொள்ளவும் இல்லை என்பதுடன் என்னை அவர்கள் அழைக்கவுமில்லை. அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர்கள் எவரும் சட்டத்தரணிகளின் அறிவிப்பில் கைச்சாத்திடவுமில்லை. அவ்வாறு எதுவும் தெரிவிக்கப்படவுமில்லை. ஆனால் மே மாதம் 9ஆம் திகதி நாம் ஒன்றுகூடி இந்த அரசாங்கத்துக்கு ஆட்சியை முன்னெடுக்க முடியாமல் போனால் எதிர்க்கட்சித் தலைவரை அழைத்து அதனைப் பொறுப்பேற்குமாறு தெரிவிப்போம் என தெரிவித்திருந்தோம். அவருக்கு முடியாது என்றால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருப்பவருக்கு அரசாங்கத்தை கொண்டு நடத்த அழைப்பு விடுப்போம் என்பதையும் அதன் போது தீர்மானித்தோம். அதற்கு சட்டத்தரணிகள் சங்கம் தேவையில்லை என்பதே எமது கருத்து. அத்துடன் மே 7,8ஆம் திகதிகளில் சட்டத்தரணிகள் சங்கம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

இதன்போது அரசியல் சார்பற்ற ஒருவரை பிரதமராக நியமிக்க வேண்டும் என்றே அவர்கள் கலந்துரையாடினர். அந்த வகையில் சாலிய பீரிஸை தேசியப் பட்டியலில் பாராளுமன்றத்துக்கு கொண்டுவந்து பிரதமராக்கும் எண்ணமே அவர்களிடம் காணப்பட்டது. ஆனால் காலி முகத்திடலில் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து நிலைமை மாறியது. எதிர்க்கட்சித் தலைவர் பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ளமறுப்புதெரிவித்ததைத்தொடர்ந்து அவர்கள் எப்படியாவது பிரதமராகலாம் என்றே எண்ணிக்கொண்டிருந்தனர். அதற்காக பூரணமான தயார் நிலையிலேயே இருந்துள்ளனர்.

ஆனால் மே 9ஆம் திகதி நான் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டதால் அவர்களின் திட்டம் பலிக்கவில்லை. அத்துடன் காலிமுகத்திடல் போராட்டத்தை இவ்வாறே விட்டு விட்டால் இது பெரும் பிரச்சினையாகி விடும் என பலரும் தெரிவித்தனர். சுமந்திரன் எம்.பி.யும் அங்கு சென்று அவர்களுக்கு ஆதரவாக கருத்துக்களை தெரிவித்திருந்தார். அதனால் சிலர் இது தமிழ் புலம்பெயர் அமைப்புகளின் பின்னணியைக்கொண்டது என்று தெரிவித்தனர். ஆனால் அது உண்மையல்ல.

தமிழ் புலம்பெயர் அமைப்புகள் அதில் சம்பந்தப்படவில்லை என்பதை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவித்திருந்தனர். யாழ்ப்பாணத்தில் ஆயிரம் பேரை ஒன்று சேர்க்க முடியாத எமக்கு இங்கு இவ்வாறு செயற்பட முடியுமா என்றும் அதிகாரபகிர்வை பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே எமது நோக்கம் என்றே அவர்கள் தெரிவித்து வந்தனர். மே 9ஆம் திகதி இவர்கள் திட்டமிட்டு செயற்பட்டு ஜனாதிபதியை விரட்டினார்கள். எனது வீட்டுக்கு தீ வைத்தார்கள். என்னை பதவி விலக சொன்னார்கள். அப்போது நான் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு உள்ளவர் முன்வந்தால் நான் இந்த பதவியில் இருந்து நீங்குகிறேன் எனத் தெரிவித்தேன்.

நாட்டின் சட்டமும் அதுதான். ஆனால் அவர்கள் என்னை பதவி விலகுமாறே தெரிவித்து வந்தனர். அப்படியானால் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ள வேறு மறைமுக சக்தி காணப்பட்டதா என்பதை நாம் பார்க்க வேண்டும். இந்த நிலையிலேயே திங்கட்கிழமை நாம் அமைச்சரவையைக் கூட்டினோம். அதன்போது அவர்கள் புதன் கிழமை பிரதமர் அறையை முற்றுகையிட்டு தாக்கினார்கள் பின்னர் பாராளுமன்றத்தை முற்றுகையிட வந்தார்கள். இறுதியில் எமது பாராளுமன்ற சிறப்புரிமைகளை இல்லாமலாக்கவே ஆர்ப்பாட்டக்காரர்கள் முயற்சித்தனர்.

இதற்கு இடமளிக்க முடியாது என்பதால் நான் இராணுவத்தை அழைத்து பாராளுமன்றத்தை பாதுகாக்குமாறு பணிப்புரை விடுத்தேன்.

எனவே இந்த விடயங்களை சுமந்திரன் எம்.பி ஏற்றுக்கொள்வாரோ இல்லையோ எனக்கு தெரியாது.

இதுதொடர்பில் தற்போது விவாதித்து பயன் இல்லை. தேவையானால் பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமித்து அது தொடர்பாக ஆராய முடியும்" என்று தெரிவித்தார்.

## பொருளாதாரம் தொடர்பான...

அடையவில்லையெனத் தெரிவித்த அமைச்சர், பொருளாதாரம் பாதிக்கப்பட்ட விதம் தொடர்பாக புள்ளிவிபரங்களுடன் 7 தினங்களுக்கு விவாதம் நடத்தவும் தான் தயாரெனவும், அவர் மேலும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் உரையாற்றிய அமைச்சர்,"பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 101 (3) (1) இன் கீழ் அரசாங்கத்தின் நிதி தொடர்பான தெரிவிக்குழுவில் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

அந்த தெரிவுக்குழுவின் தலைவராக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவே பதவி வகிக்கின்றார். அந்த அறிக்கையை நான் ஆராய்ந்து பார்த்துள்ளேன்.

அந்த வகையில், 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இதுவரை நாடு முகங்கொடுத்திராத மிக மோசமான நெருக்கடி நிலையிலேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் விரிவான பொருளாதார வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கத்துக்கு நேரிட்டுள்ளது.

நீண்டகால பலவீனமான பொருளாதார வேலைத்திட்டங்கலே 2022ஆம் ஆண்டு மோசமான பொருளாதார நெருக்கடிக்கு காரணமானது.அரசாங்கத்தின் நிதி வினைத்திறன் இன்மை மற்றும் வருமானத்தை முறையாக சேகரிக்காமை ஆகிய காரணங்களே நிதி நெருக்கடி அதிகரிப்பதற்கு காரணமானது.

அதிக செலவுடன் கடன் பெற்றுக்கொள்வதில் தங்கியிருந்ததன் காரணமாக அரச கடன் முறையற்ற மட்டத்துக்கு தள்ளப்பட்டது. அதன் காரணத்தால் 2022ஆம் ஆண்டு நிறைவடையும் போது, தேசிய உற்பத்தி 128 வீதமாகியது.

## இஸ்ரேலில் விவசாயத்துறையில்...

ஆட்சேர்ப்பு செய்வதாக வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல்கள் கிடைத்துள்ளன. உஸ்வெட்கெய்யாவ, தல்தியவத்த பிரதேசத்திலுள்ள வீடொன்றில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு வருவதாகவும் அந்தக் காணொளியில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் விசாரணை அதிகாரிகள் வீட்டை சோதனையிட்ட வேளையில், நூற்றுக்கும் மேற்பட்டோர் நேர்காணலுக்கு சென்றிருந்தனர். இஸ்ரேலில் விவசாயத் துறையில் வேலைவாய்ப்பு தருவதாகக் கூறி ஒவ்வொருவரிடமிருந்தும் 25 இலட்சம் ரூபாவை இச்சந்தேகநபர்கள் வசூலித்ததாகவும் நேர்காணலுக்கு சென்றிருந்த இளைஞர்கள், விசாரணை அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

## இலங்கைக்கு அருகில் பயணிக்கும்...

"இந்த நாட்டில் தேசிய பாதுகாப்பும் சட்டத்தின் ஆட்சியும் சீர்குலைந்து போனதுடன், நாட்டு மக்கள் எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்காக வரிசையில் நின்று சோர்வடைந்தனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சரியான தலைமையின் கீழ் நாட்டின் நிலைமை அன்றைய நிலையை விட சிறந்த நிலைக்கு தற்போது கொண்டு வரப்பட்டுள்ளது. சரியான முடிவுகளால் நாட்டின் பொருளாதாரம் தற்போது வலுப்பெற்றுள்ளது.

## கடத்தப்படவிருந்த...

கிடைத்ததைத் தொடர்ந்து, அங்கு நேற்று (24) அதிகாலை தனிப்படை பொலிஸார் தீவிரமாக சோதனை நடத்திய போது, முச்சக்கரவண்டிகளை நிறுத்தி வைத்து படகுகளில் சந்தேகத்துக்கிடமான மூடைகள் ஏற்றிக்கொண்டிருந்ததை அவதானித்தனர். இந்நிலையில், இந்திய மதிப்பில் 2 இலட்சம் ரூபா பெறுமதியான பீடி இலைகள் இருந்தமை பொலிஸாருக்கு தெரியவந்தது.

## ராகுல் காந்திக்கு...

பய்டோ பிரதேசத்தில் நடைபெற்ற காங்கிரஸ் பிரசாரக் கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி கலந்துகொண்டார். இந்தக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடியை அவமதிக்கும் வகையில் ராகுல் பேசியதாக பா.ஜ.க. சார்பாக தலைமை தேர்தல் ஆணையத்திடம் புகார் செய்யப்பட்டது.

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் மோடி தொடர்பாக ராகுல் காந்தி தவறாக பேசியதுடன், ராகுல் காந்தி மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை கிரிக்கெட் இடைக்கால...

திங்கட்கிழமை (27) மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. இந்த விசாரணை தொடர்ந்து நான்காவது தடவையாக ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நீர்வளத்தை விற்பனை செய்யும்...

நாட்டின் நீர்வளத்தை பாதுகாப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதே தவிர, விற்பனை செய்யும் தீர்மானம் எதுவும் இல்லையெனவும் உறுதியாகத் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், மின்விநியோக கட்டமைப்பு பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்த நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் உருவாக்கப்பட்டது. உக்ரைன் ரஷ்யாவுக்கு இடையிலான மோதல் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் மின்விநியோகத்துக்கான கேள்வி உயர்வடைந்தது. தற்போது இஸ்ரேல் பலஸ்தீனத்துக்கு இடையிலான மோதலால் மின்விநியோகக் கட்டமைப்பு மீண்டும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

எனினும், தடையின்றி மின்விநியோகம் மற்றும் எரிபொருள் விநியோகத்தை முன்னெடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நாட்டில் நிலவிய டொலர் தட்டுப்பாட்டால், எமது கடற்பரப்பில் எரிபொருள் கப்பல் நங்கூரமிட்டிருந்ததை எவரும் மறக்கக்கூடாது. எனினும், தற்போது நிலைமை வழமைக்கு திரும்பியுள்ளது.

## மண்ணெண்ணெய்க்கும் டீசலுக்கும்...

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுக்கான செலவுத்தலைப்பு மீதான விவாதத்தின் போது எதிரணியினர் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,"வற் வரி அதிகரிப்புடன் எரிபொருள் விலை சடுதியாக அதிகரிக்கக் கூடும் என எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகின்றார்கள்.

வற் வரி தொடர்பில் ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டுள்ள நிலையில் இறுதி தீர்மானம் அடுத்த மாதம் 10 ஆம் திகதி அறிவிக்கப்படும்.

## டிசம்பர் 22 முதல்...

தேசிய கல்வி நிறுவனம், தொழிற்பயிற்சி அதிகார சபை மற்றும் திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றினூடாக இந்தப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்படும்.

இதற்கமைய இம்முறை க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் 237,000 மாணவர்களுக்கும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 15ஆம் திகதியின் பின்னர் அந்த முதலாவது தொழிற்பயிற்சி பாடநெறி ஆரம்பிக்கப்படும்.

பரீட்சை முடிவடைந்ததும், அந்தப் பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. ஆங்கிலமொழி மற்றும் தொழில்நுட்பத்துக்கு மேலதிகமாக தாம் விரும்பும் 2 தொழில்நுட்பப் பாடங்களை தெரிவு செய்ய முடியும்.

மாணவர்கள், உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை பெறும்வரை 4 மாதங்கள் இந்தப் பாடநெறியை கற்க முடியும்.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை தெரிவு செய்த பின்னர், ஏனைய மாணவர்கள், பரீட்சையொன்றினூடாக தகுதியான பாடநெறிகளுக்கு தெரிவு செய்யப்படுவர்.மாணவர்களுக்கு பொருத்தமான தொழிலுக்கேற்ற பாடநெறிகளே வழங்கப்படும்.

# கிழக்கின் குரல்



# 22 மில்லியன் ரூபா செலவில் வாகரையில் அபிவிருத்தித் திட்டங்கள்





(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலக பிரிவில் 22 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 16 கிரெவல் வீதிகள் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டதுடன் நீர்வழங்கல் திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மணல் வீதிகளற்ற கிராமங்கள் எனும் கருத்திட்டத்திற்கமைய மாவட்டம் பூராகவுமுள்ள பல வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டு பொருளாதாரரீதியில் சற்று பின்னடைவில் காணப்படும் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேசத்தின் உட்கட்டுமானங்களை விருத்திசெய்யும் முகமாக அங்கு அமைக்கப்பட்ட 16 கிரெவல் வீதிகளையும் நீர்வழங்கல் திட்டத்தினையும் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கும் நிகழ்வு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவ.சந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

அதற்கமைய கோறளைப்பற்று வடக்கு, புனாணை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் புனரமைக்கப்பட்ட 2ம் குறுக்கு விவேகானந்தா வீதி, 6ம் குறுக்கு காந்தன் வீதி, 5ம் குறுக்கு வள்ளுவர் வீதி, 7ம் குறுக்கு தம்பிமுத்து வீதி, 8ம் குறுக்கு வேலுப்பிள்ளை வீதி, தேவாலய வீதி, இணைப்பு வீதி,1ம் குறுக்கு வீதி, 2ம் குறுக்கு வீதி, 3ம் குறுக்கு வீதி, 5ம் குறுக்கு வீதி, 4ம் குறுக்கு வீதி, 8ம் குறுக்கு வீதி மற்றும் வட்டவான் கிராம சேவகர் பிரிவில் அமைக்கப்பட்ட துறையடி வீதி, சித்தி விநாயகர் வீதி, பொதுக் கட்டட குறுக்கு வீதி என்பன சுமார் 22 மில்லியன் செலவில் கிரெவல் வீதிகளாக செப்பனிடப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

அதனுடன் இணைந்ததாக சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட வட்டவான் புதிய கிராம மக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கி வந்த குடிநீர் பிரச்சினைக்கு தீர்வாக நீர்வழங்கல் திட்டத்தையும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினூடாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகளில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்ஷினி ஸ்ரீகாந்த், கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் ஜீ.அருணன், மாவட்ட செயலக பொறியியலாளர் சுமன், உதவிப் பிரதேச செயலாளர் பிரணவன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் ஜதீஷ்குமார் மற்றும் நிர்மல், கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலக பிரிவினுடைய உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சுதர்ஷன், இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ஆறுமுகம் தேவராஜ், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரின் தனிப்பட்ட செயலாளர் தம்பிராஜா தஜிவரன், நவரெத்தினம் திருநாவுக்கரசு உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## கிழக்கு மாகாணத்தில்...

# ஆயிரம் பயன்தரும் மரக்கன்றுகள் நடும் திட்டம்



(ஒலுவில் விசேட நிருபா்)

கிழக்கு மாகாணத்தில் ஆயிரம் பயன்தரும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர்கள் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற மரம் நடும் நிகழ்வு புதன்கிழமை (22) நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் நடைபெற்றது.

"மாகாணம் செழிக்க மரம் நடுவோம்" எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற மரம் நடும் நிகழ்வு சங்கத்தின் பிரதித் தலைவர் ஏ.சி. அயாத்து முஹம்மது தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளரும், நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ. நபீல் கலந்துகொண்டு மரத்தை நாட்டி வைத்தார்.

அம்பாறை மாவட்டத்தில் பல பிரதேசங்களில் இதுவரை 378 பயன்தரும் மரக்கன்றுகளை நாட்டி வைக்கப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர்கள் சங்கத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.எல்.எம். அபூபக்கர் தெரிவித்தார்.

# காத்தான்குடி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா



(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி மத்திய கல்லூரி தேசியப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கடந்த 2019ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாண்டு 2023ஆம் ஆண்டு வரை பாடசாலையில் பல்வேறு சாதனைகளை அடைந்த மாணவர்கள், சிறந்த பெறு பேறுகளைப் பெற்ற மாணவர்கள், சிறந்த அடைவு மட்டங்களைப் பெற்ற மாணவர்கள் இதன்போது பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். நினைவுச்சின்னங்கள், சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் பாடசாலை அதிபர் மற்றும் பிரதி அதிபர், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்

இந்த பரிசளிப்பு விழா கல்லூரின் அதிபர் எம்.ஏ.நிஹால் அஹமட் தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவின் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கலந்துகொண்டார்.

இதில் விஸேட விருந்தினர்களாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ்; மற்றும் பேராசிரியர் முஸ்தபா உட்பட கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், முக்கியஸதர்கள் பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர். இதன்போது அதிதிகள் பேண்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு மாணவர்களின் சிறப்பு வரவேற்பு இடம் பெற்றதுடன் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# மண்டூரில் பக்தி பாடல்கள் அடங்கிய இசைத்தட்டு வெளியீடு

( காரைதீவு குறூப் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான் நிலப்பரப்பில் எல்லைக் கிராமமான மண்டூர் நாகஞ்சோலை மாணிக்க பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நான்கு பாடல்கள் அடங்கிய இசைத்தொகுப்பு அண்மையில் வெளியீடு செய்யப்பட்டது.

நாகஞ்சோலை கலை எழுச்சி மன்றத்தின் தயாரிப்பில் டீ.ரீ.எஸ் படைப்பகத்தின் வெளியீடாக வெளிவந்த இசைத்தட்டில் மாணிக்கப்பிள்ளையார் புகழ்பாடும் கும்மி பாடலை நிஜந்தன் மற்றும் சுலக்சனா இணைந்து சிறப்பாக எழுதியுள்ளதுடன் டினேஸ்குமார் மற்றும் லுக்க்ஷா ஆகியோர் பாடியுள்ளனர்.

இரண்டாவது பாடலான "நாகர் பூமி.." என ஆரம்பிக்கும் வரலாறு சுமந்த பாடலை காண்டீபன் அவர்களின் அழகிய வரிகளில் டினேஸ்குமார் குரல் வழங்கியுள்ளார். மூன்றாவது "மதலை மொழியேற்றி.." என ஆரம்பிக்கும் பிள்ளையார் புகழிசைக்கும் பாடலின் பாடலாசிரியராக கிலசன் வரிகளை வடித்துள்ளதுடன் ஜெயபிருந்தாவனி பாடலை பாடியுள்ளார்.

இசைத்தட்டின் நான்காவது பாடலை டினேஸ்குமார் வரிகளில் பிருந்தாபன் மற்றும் ஜெயநளினி ஆகியோர் பாடியுள்ளனர்.

இந்தப் பாடல்கள் அனைத்தும் ஆலய முன்றலில் குருமார்கள், ஆலய பரிபாலன சபையினர், நாகஞ்சோலை கலை எழுச்சி மன்றத்தினர், டீ.ரீ.எஸ் படைப்பகத்தினர் மற்றும் பக்தர்களின் பங்குபற்றுதலுடன் வெளியீடு செய்யப்பட்டது.

நாகஞ்சசோலை மாணிக்க பிள்ளையாரில் புகழிசைக்கும் பாடல் தொகுப்பினை DTS Creations எனும் வலையொளி பக்கத்தினூடாக கேட்டு இறையருள் பெறலாம்.

# எட்டு வருடங்களின் பின்னர் சம்மாந்துறை ஹிஜ்ரா முஸ்லிம் வித்தியாலய மாணவி சாதனை

( காரைதீவு குறூப் நிருபர்)



சம்மாந்துறை ஹிஜ்ரா முஸ்லிம் வித்தியாலயத்தில் 8 வருடங்களின் பின்னர் புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவி அய்யூப் கான் இஸ்ஸத் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளார்.

பொருளாதார ரீதியாக தேவையுடைய சம்மாந்துறை சென்நெல் கிராம் 02 இல் குறிஞ்சி சாரலில் அமையப் பெற்ற ஹிஜ்ரா பாடசாலையில் பல பௌதீக வள தேவைகளுக்கு மத்தியில் மாணவி இஸ்ஸத் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இம் மாணவியின் சாதனையை பாராட்டும் முகமாக பாடசாலை சமூகம் நேற்றுமுன்தினம் அதிபர் வைபிஎம். இஸ்மாயில் தலைமையில் ஏற்பாடு செய்திருந்தது.

நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து அல்ஹாஜ் எஸ்.எல். முகம்மது ஹனீபா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு விசேட உரையினை உளவள ஆலோசகர் மனூஸ் அபூபக்கர் நிகழ்த்தினார். விசேடமாக தரம் 1 முதல் 5 வரை இம்மாணவிக்கு கற்பித்த சகல ஆசிரியர்களும் நன்றி உணர்வுடன் நினைவு கூரப்பட்டதுடன் கௌரவமும் வழங்கப்பட்டது.

# தொற்றாநோய் விழிப்புணர்வு நிகழ்வு



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

சாய்ந்தமருது –மாளிகைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த பெண்களுக்கு தொற்றா நோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் நடைபெற்றது. சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை பதில் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஸனூஸ் காரியப்பர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகை தந்திருந்த பெண்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட தெரிவுசெய்யப்பட்ட முதியவர்களுக்கு அவர்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு கட்டில், மெத்தைகள் என்பன தேசிய முதியோர் செயலகத்தின் அனுசரணையுடன் வழங்கிவைக்கப்பட்டன.

(படம் தோப்பூர் தினகரன் நிருபர்)

# தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சி



(கந்தளாய் தினகரன் நிருபர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் கல்வி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சி திட்டமானது நேற்று முன்தினம் (23) திருகோணமலை தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெற்றது.

தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சி திட்டமானது 2023 ஆம் ஆண்டு திருகோணமலை தொழில்நுட்ப கல்லூரியில் கற்கை நெறியை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்காக நடாத்தப்பட்டது. எதிர்கால தொழில் முயற்சிகள், ஏனைய உயர்கல்வி வாய்ப்புகள், வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் தொடர்பான பல விடயங்கள் இதன்போது வளவாளர்களினால் தெளிவூட்டப்பட்டன. இந்நிகழ்வில் மாவட்ட இணைப்பாளர் திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வி க.மதுரன், மாவட்ட இணைப்பாளர் மனிதவள அபிவிருத்தி திருமதி ஜெசினா பௌமி, மொறவெவ பிரதேச செயலக திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.முகுந்தன் மற்றும் மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# அகில இலங்கை நடன போட்டியில் புனித சிசிலியா கல்லூரி முதலிடம்





(கல்லடி குறூப்நிருபர்)

அநுராதபுரத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான சமஸ்தலங்கா அகில இலங்கை நடன போட்டியில் பங்குபற்றிய மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட புனித சிசிலியா பெண்கள் கல்லூரியின் மேல் பிரிவு குழுநடன (தைந்நீராடல்) மாணவிகள் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இக்கல்லூரியின் சார்பில் மாவட்ட மற்றும் மாகாண மட்டப் போட்டிகளில் முதலிடங்களைப் பெற்ற மேற் பிரிவைச் சேர்ந்த தைந்நீராடல் மற்றும் தேயிலைக் கொழுந்து நடனக் குழு மாணவிகள் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றியிருந்த நிலையில் குழுநடனத்தில் போட்டியிட்ட தைந்நீராடல் நடன குழு மாணவர்கள் முதலிடத்தைப் பெற்று கல்லூரிக்கும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளதுடன், தேயிலைக் கொழுந்து நடனக் குழு மாணவிகள் தேசிய மட்டத்தில் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

வெற்றி கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரி நித்தாஞ்சலி வழிகாட்டலில், நடன ஆசிரியை திருமதி. பி.விஜயசேகரன், ஆசிரியை திருமதி ரீ.நிஷாந்தன், மாணவி பீ.பிரதாயினி ஆகியோரின் கடின முயற்சியினாலும் வெற்றி பெறப்பட்டதென பாடசாலை சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# மகாஜனாவின் யதார்த்தமான எதிர்பார்ப்புக்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவேன்

## அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு



மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் யதார்த்தமான அபிலாஷைகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சமூகத்தின் கோரிக்கைகளில் இருக்கின்ற யதார்த்தத்தை புரிந்து கொள்கின்றமையினால், அதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கு நேற்று விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாடசாலை சமூகத்தின் எதிர்பார்ப்புக்கள் கோரிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"மகாஜனாக் கல்லூரியின் வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பினை வழங்கி வருகின்ற இரண்டு ஆசிரியர்களுக்கான இடமாற்றங்களை இரத்து செய்து தருமாறு என்னை வந்து சந்தித்து பாடசாலை சமூகத்தினரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. எப்போதும் பெரும்பான்மை கருத்துக்களில் நியாயம் இருப்பின் அதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனும் நிலைப்பாட்டை கொண்ட நான், பாடசாலை சமூகத்தினரின் பூரண ஆதரவு இருக்குமாயின் அதற்கு எனது ஒத்துழைப்பும் இருக்கும் என்பதை கூறியிருந்தேன்.

அதனை உறுதிப்படுத்தும் வகையில் இன்று உங்கள் முன்னிலையில் வந்திருக்கின்றேன். இந்தளவிற்கு பெருந்தொகையானோர் திரண்டு வந்து உங்களின் ஆதரவை வெளிப்படுத்துவீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை.

உங்களின் எதிர்பார்ப்புக்களான இரண்டு சிரேஷ்ட ஆசிரியர்களும் இந்தப் பாடசாலையில் தொடர்ந்தும் பணியாற்றுவதற்கு தேவையான பூரண ஒத்துழைப்பினை நான் வழங்குவேன். இப்பிரச்சினையை மாகாண மட்டத்தில் தீர்க்க முடியும் என்று நம்புகின்றேன்.

முடியாவிட்டால், மத்திக்கு எடுத்துச் சென்றாவது சாதகமான முடிவை பெற்றுத்தருவதற்கு தயங்க மாட்டேன். என்னைப் பொறுத்தவரையில், மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு எதிரான அனைத்து தடைகளையும் உடைத்தெறிந்து அவற்றை நிறைவேற்றுவதே என்னுடைய அணுகுமுறையாக இருக்கின்றது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இந்த விவகாரம் தொடர்பான செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் நிர்வாகத்தினுள் மூக்கை நுழைத்து நான் குழப்பங்களை ஏற்படுத்துவதாக அநாமதேய சமூக ஊடகங்களில் கருத்துக்கள் பரப்பப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்



யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் அமைந்துள்ள TP ஹன்ட் சித்திர கலைக்கூடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சித்திர போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் விமரிசையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்து கொண்டதுடன் நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் திருமதி.யோகமணி அழகரத்தினம் உள்ளிட்ட பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# யானை உயிரிழப்பு; காணி உரிமையாளர் கைது

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)



முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் பெரிய சாளம்பன் கிராமத்தில் வயல் காணியில் போடப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்குண்டு கொம்பன் யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் கடந்த 22ஆம் திகதி இரவு இடம்பெற்றது. இதில் 15 வயது மதிக்கத்தக்க யானையொன்று உயிரிழந்துள்ளது.

யானையின் உயிரிழப்பு தொடர்பில் மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினர் சம்பவ இடத்துக்கு வருகை தந்துள்ளனர். இதனையடுத்து சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்ட வனஜீவராசிகள் திணைக்கள மருத்துவர்கள் பரிசோதனைகளின் பின்னர் யானையின் கொம்புகள் அகற்றப்பட்டு யானையை புதைத்துள்ளனர். இதனையடுத்து 45 வயதான காணி உரிமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யானையின் தந்தங்கள் மற்றும் மின்சார வேலியிலிருந்த மின் இணைப்பு கருவிகள் அனைத்தும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. காணியின் உரிமையாளரை எதிர்வரும் டிசம்பர் மாதம் 07 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# இலங்கை நீதித்துறை வரலாற்றில் இளவயதில் நீதிபதியாகும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண்!





யாழப்பாணத்தைச் சேர்ந்த திருமதி மாதுரி நிரோசன் நீதிபதியாக பதவிப் பிரமாணம் செய்யவுள்ளார்.

இலங்கை நீதித்துறை வரலாற்றில் மிக இளவயதில் நீதிபதியாகும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண் இவராவார்.

யாழ் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் பழைய மாணவியான இவர் தனது 31 ஆவது வயதில் நீதிபதியாக பதவியேற்கவுள்ளார்.

நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்படும் நீதிபதிகளைத் தெரிவு செய்யும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி 67 புள்ளிகளைப் பெற்று தமிழ்மொழி மூலமாக அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

பிரபல சட்டத்தரணியான நிரோசனின் மனைவியான இவர் யாழ்ப்பாணம் தொல்புரத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது இவர் தனது கணவருடன் வேலணையில் வசித்து வருகிறார். உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த இவர், பல்கலைக்கழகத்தில் வணிகத்துறையில் படிப்பை விரும்பிய போதிலும் பெற்றுக் கொண்ட அதிக பெறுபேறு காரணமாக சட்டப் படிப்பைத் தொடர்ந்தார். நான்கு வருடங்களில் தனது சட்டக் கல்வியை முடித்துக் கொண்ட இவர், அதே பல்கலைக் கழகத்தில் சில வருடங்கள் சட்டத்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றினார். பின்னர் வடக்கிலுள்ள பல நீதிமன்றங்களில் நான்கு வருடங்கள் இவர் சட்டத்தரணியாக முன்னியைலயாகியமை குறிப்பிடத்தக்கது.

# மரண தண்டனை கைதிக்கு பொது மன்னிப்பு வழங்க கோரிக்கை

(யாழ். விசேட நிருபர்)



மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இரண்டு பிள்ளைகளின் தாயான செ.சத்தியலீலாவை பொதுமன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கான கோரிக்கை கடிதத்தை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றையதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் நேரில் சென்று கையளித்தனர்.

ஆளுநரின் சார்பில் ஆளுநர் செயலக மக்கள் தொடர்பு அதிகாரி கோரிக்கை கடிதத்தைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கடிதத்தின் பிரதிகள் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் தெரிவித்தார்.

14 ஆண்டுகளாக சிறைவாசம் அனுபவித்து விடுதலையான பின்னர் மரணதண்டனையை எதிர்நோக்கியுள்ள இரண்டு பிள்ளைகளின் தாயான தமிழ் அரசியல் கைதி தொடர்பானது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான செ.சத்தியலீலா என்பவர் 14 ஆண்டு காலம் தமிழ் அரசியல் கைதியாக வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தினூடாக விடுவிக்கப்பட்டிருந்தார். எனினும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேல்முறையீடு காரணமாக இப்பெண்மணி மீண்டும் மரணதண்டனையை எதிர்நோக்கியுள்ளார்.

அதாவது, 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதான குண்டுத்தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் முன்பள்ளி ஆசிரியையான குடும்பத் தலைவி செ.சத்தியலீலா என்பவர் அவசரகாலச் சட்டவிதியின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார். இவர், சுமார் 14 ஆண்டுகள் சிறையில் இருந்தபடி நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முகம்கொடுத்து கடந்த ஜனவரி 14, 2018 அன்று கொழும்பு மேல் நீதிமன்றினால் "15 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு கடூழிய சிறைத் தண்டனையுடன் சேர்த்து 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்த வேண்டும்." என்கின்ற நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், மேல்நீதிமன்றம் வழங்கிய இவ்வழக்குத் தீர்ப்பில் திருப்தியுறாத சட்டமா அதிபர் அதனை ஆட்சேபித்து மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார். அதற்கமைய மேல்முறையீட்டு நீதிமன்றம் செ.சத்தியலீலா என்பவருக்கு ஜனவரி 23, 2023 அன்று மரணதண்டணை தீர்ப்பளித்துள்ளது. நிரந்தர வருமானமின்மையால் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கித்தவிக்கும் சத்தியலீலாவால் தனக்கென ஒரு சட்டத்தரணியை அமர்த்துவதில் கூட மிக சிரமப்படுவதாக அவரது குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

## வட்டுக்கோட்டை இளைஞன் விவகாரம்

# யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தில் பலத்த பாதுகாப்பு

(யாழ்.விசேட நிருபர்)



யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தை சூழ பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் கைது செய்யப்பட்டு, சித்திரவதைக்குள்ளான நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இளைஞனின் உயிரிழப்பு தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் யாழ்ப்பாண நீதிமன்றில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றமையால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. இளைஞன் உயிரிழந்தது, யாழ்.நீதவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் என்பதனால், கொலை தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகிறது.

கடந்த திங்கட்கிழமை யாழ். போதனா வைத்திசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் அவர் கடுமையாக அடித்து துன்புறுத்தப்பட்டதால் சிறுநீரகம் பாதிப்புக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு சென்று, சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் உத்தியோகத்தர்களிடமும் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

இந்நிலையில் வழக்கு விசாரணைகள் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றமையால் நீதிமன்ற பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

# கால்வாயில் விழுந்த பொலிஸ் உத்தியோகத்தரை காணவில்லை

(சாவகச்சேரி விசேட நிருபர்)



சாவகச்சேரி தபால் நிலைய வீதியைச் சேர்ந்த இளம் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் வியாக்கிழமை சந்தேகநபர் ஒருவரை கைது செய்ய முற்பட்ட வேளையில் ஜா எல கால்வாயில் விழுந்து காணாமல் போயுள்ளார்.

திருட்டு குற்றச்சாட்டுடன் சம்பந்தப்பட்ட சந்தேகநபரை கைது செய்ய முற்பட்ட வேளையிலேயே ஜாஎல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் கால்வாயில் விழுந்து காணாமல் போயுள்ளார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த 26 வயதான பிரதாபன் என்ற இளம் பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக தெரியவருகின்றது.



யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான கட்டளை தளபதி பிரிகேடியர் கேட்டிஆராய்ச்சியின் கருவுக்கமைவாக 09 பாடசாலைகளின் 200 மாணவர்களுக்கான கற்றல்உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு தருமபுரம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் கரைச்சி பிரதேச செயலாளர் மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர், இராணுவ உயர் அதிகாரிகள் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மாணவர்களுக்கான மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டது. (படங்கள்: பரந்தன் குறூப் நிருபர்)

# இளம் பெண்ணை காணவில்லை

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

கிளிநொச்சியில் வேலைக்கு சென்ற இளம் குடும்பபெண்ணை காணவில்லையென பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி முரசுமோட்டை 2 கட்டை கோரக்கன் கட்டுப்பகுதியில் வசித்துவரும் இளம் குடும்ப பெண் ஒருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இதுதொடர்பில் கடந்த 15 ஆம் திகதி கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் இதுவரை இதுதொடர்பில் எந்தவித தகவலும் கிடைக்கவில்லையென உறவினர்கள் தெரிவித்தனர். புதுக்குடியிருப்பு முல்லைத்தீவைச் சேர்ந்த இவர் திருமணத்துக்கு பிறகு முரசுமோட்டைப்பகுதியில் வசித்து வந்துள்ளார்.

தினகரன் வர்த்தக உலா

சம்ஸ் பாஹிம்

# ஹேமாஸ் ஹொஸ்பிட்டலின் Hemas Ambulatory Surgical Care



இலங்கையில் சுகாதாரப் பராமரிப்புத் துறைக்கு மீள் வரைவிலக்கணம் வகுக்கும் வகையில், நோயாளர்கள் அதிநவீன சத்திர சிகிச்சைகளின் பின்னர், அதே நாளில் வீடு திரும்பி, விரைவாக, சிறப்பாக மற்றும் மிகுந்த சௌகரியத்துடன் குணமடைவதற்கு இடமளிக்கும் முறையான, Hemas Ambulatory Surgical Care அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. முதல் முறையாக கிடைக்கின்ற இச்சேவை, சத்திர சிகிச்சை நடைமுறைகளில் இலங்கை மக்களின் அனுபவங்களை மாற்றியமைத்து, கூடுதல் சௌகரியம், செலவுச் சிக்கனம் மற்றும் மிக முக்கியமாக தனித்துவமான வகையில் நோயாளரை மையப்படுத்திய அணுகுமுறையை வழங்குகின்றது.

இது தொடர்பில் ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் மற்றும் ஆய்வுகூடங்கள் சங்கிலியின் முகாமைத்துவப் பணிப்பாளரான கலாநிதி லகித் பீரிஸ் அவர்கள் கருத்து வெளியிடுகையில், "நிபுணத்துவம் வாய்ந்த வீட்டுப் பராமரிப்பு மருத்துவ அணியின் உதவியுடன், பழக்கமான சூழலில், நோயாளர்கள் தங்கள் வீட்டின் சௌகரியத்துடன் விரைவாக குணமடைவதாக அறியப்படுகிறது. ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் வழங்கும் சத்திர சிகிச்சையை முடித்து அதே நாளில் வீடு திரும்பும் வசதியுடன், சிறிய சத்திர சிகிச்சைகள் முதல் மேம்பட்ட சத்திர சிகிச்சைகள் வரை, இரவில் மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டிய அவசியமின்றி நோயாளிகள் பரந்த அளவிலான சத்திர சிகிச்சை நடைமுறைகளை மேற்கொள்ள உதவுகிறது.

வைத்தியசாலையில் தங்கியிருந்து இதே சத்திர சிகிச்சையை மேற்கொள்ளும் போது ஏற்படுகின்ற செலவில் 30% ஐ குறைக்க தற்போது இவ்வசதி வழிகோலுகின்றது" என்று குறிப்பிட்டார்.

# National Industry Excellence Awards 2023 இல் தங்க விருதை வென்ற SMR Consolidated



சமையல் எண்ணெய் வகைகள் மற்றும் கொழுப்பு தயாரிப்புக்களின் உற்பத்தி, சுத்திகரிப்பு மற்றும் ஏற்றுமதி செயல்பாடுகளில் இலங்கையில் முன்னணி வகித்து வருகின்ற நிறுவனமாக SMR Consolidated (Sena Mills and Refineries Pvt Ltd) திகழ்ந்து வருகின்றது. தரம் மற்றும் மேன்மை மீது காண்பித்து வருகின்ற ஓயாத அர்ப்பணிப்பிற்கு கிடைத்துள்ள மாபெரும் வெற்றியாக, பெருமதிப்பு மிக்க National Industry Excellence Awards 2023 விருதுகள் நிகழ்வில் தேசிய மட்டத்தில் தங்க விருதை வென்றுள்ளது.

கொழும்பிலுள்ள நெலும் பொக்குண அரங்கில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையால் நடாத்தப்பட்ட தேசிய கைத்தொழில் விருதுகள் வைபவத்தில் SMR Consolidated க்கு மதிப்புமிக்க இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. SMR Consolidated இன் முகாமைத்துவப் பணிப்பாளர் திஷான் கருணாசேன நிறுவனத்தின் சார்பில் இவ்விருதை பெற்றுக்கொண்டார். SMR Consolidated இன் மூலோபாய வணிக மேம்பாட்டுக்கான தலைமை அதிகாரி திமாந்த நாணயக்கார அவர்கள் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, கருத்தினைப் பகிர்கையில், "பாரிய அளவிலான தெங்குப் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தி, பெருமதிப்பிற்குரிய இவ்விருதை வென்றுள்ளமை உண்மையில் மிகுந்த கௌரவமளிக்கின்றது. நாம் செயல்பட ஆரம்பித்த காலம் தொட்டே, தரம் மற்றும் மேன்மை ஆகியவற்றில் நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் அவற்றைப் பேணி வந்துள்ளதுடன், உலகளவில் 50 க்கும் மேற்பட்ட நாடுகளில் எமது தயாரிப்புக்கள் மிகவும் விரும்பப்படுவதற்கு அதுவே காரணம்." என்று குறிப்பிட்டார்.

# SLIM DIGIS 2.3 இல் வெற்றி பெற்ற HUTCH

இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்குனரான HUTCH, SLIM Digis 2.3 இல் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதன் மூலம், டிஜிட்டல் துறையில் தொடர்ச்சியாக பிரகாசித்து வருகிறது. Creator/Influencer Digital Marketing பிரிவில் வெண்கல விருதைப் பெற்றதன் மூலம் HUTCH இப்பெருமையை பெற்றுள்ளது. டிஜிட்டல் துறையில் அதன் புத்தாக்கமான அணுகுமுறையை இது எடுத்துக்காட்டுகிறது. அது மாத்திரமன்றி சிறந்த செயற்திறன் மிக்க சந்தைப்படுத்தலுக்கான (Best Performance Marketing) Merit விருதை HUTCH பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. நிறுவனம் முன்னெடுத்த, தாக்கத்தை ஏற்படுத்தும் பிரசாரங்களுக்கான விசேடத்துவத்தை இது வெளிப்படுத்துகின்றது. டிஜிட்டல் சந்தைப்படுத்தலில் முன்னணியில் இருப்பதற்கான HUTCH கொண்டுள்ள அர்ப்பணிப்பை இந்த கௌரவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. Hutch படைப்பாற்றல் மற்றும் செயற்றிறனைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களுடன் அர்த்தமுள்ள வழிகள் மூலம் இணைவதை இது காட்டுகின்றது.

# எரிசக்தி பயன்பாட்டுச் செலவினம், காபன் வெளியேற்றத்தை கட்டுப்படுத்தும் முன்னணி கைத்தொழில் அமைப்புக்கள்




இலங்கையில் ஆகக்கூடுதலாக எரிசக்தியைப் பயன்படுத்தும் கைத்தொழில் நிறுவனங்கள், எரிசக்தி பயன்பாட்டு ஆலோசனை அமைப்புக்கள், அரச திணைக்களங்கள் போன்றவற்றின் பிரதிநிதிகள் 45 பேர் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரு வருடகால எரிசக்தி முகாமைத்துவ கற்கைநெறியை சிறப்பாக பூர்த்தி செய்துள்ளனர். இந்த பயிலுனர்கள் 45 பேருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் இடம்பெற்றது.

இந்தக் கற்கைநெறியின் ஓரம்சமாக இவர்கள் அமுலாக்கிய எரிசக்தி முகாமைத்துவ திட்டங்கள் மூலம் 7,200 மெற்றிக் தொன் பச்சை வீட்டு வாயு வளிமண்டலத்தில் சேராமல் தடுக்கப்பட்டுள்ளது. இது ஒருவருட காலத்திற்கு 1,000 இற்கு மேற்பட்ட பெற்றோல் கார்கள் வீதிகளில் ஓடாமல் இருப்பதால் கிடைக்கும் அனுகூலத்திற்கு சமமானது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண, 'உற்பத்தித் துறையானது எமது பொருளாதாரத்திற்கு முக்கியமானது' என்றார். 'நாம் சமீபத்தில் எரிசக்தி நெருக்கடிகளையும், உலகளாவிய சுவாத்திய நெருக்கடிகளையும் எதிர்கொண்டோம். இவை பெற்றோலிய எரிபொருட்களுக்கு மாற்று சக்திகளை கண்டுபிடிக்க வேண்டியை தேவையை தெளிவாக உணர்த்தியுள்ளது." என்றார்.

# சூரிய சக்தியில் இயங்கும் நீர் பம்பிகளை அறிமுகப்படுத்தும் Hayleys Solar



இலங்கையின் முதற்தர சூரிய சக்தி தீர்வு வழங்குநரான Hayleys Solar, இலங்கையின் நீர் விநியோக சவால்களை நிலைபேறான வகையிலும் திறனான தீர்வுகளுடனும் எதிர்கொள்வதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியாக, அதன் சமீபத்திய தயாரிப்புகளான சூரிய சக்தியில் இயங்கும் நீர் பம்பிகளை உள்ளூர் சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த தயாரிப்பானது, புதுப்பிக்கத்தக்க சக்திக்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், விவசாயம் முதல் குடியிருப்புகள் வரை பல்வேறு துறைகளில், கணிசமான சேமிப்பையும் வழங்குகிறது. எளிதான நிறுவல் மற்றும் திறனின் அடிப்படையிலான வகைகளில் வரும் இந்த நீர் பம்பிகள், நிலைபேறான நீர் விநியோகத்தை உறுதி செய்வதில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்த தயாராகின்றன. ஒரு தசாப்தத்திற்கும் மேலான ஒப்பற்ற சந்தை அனுபவம் மற்றும் நாடு முழுவதும் 150MW கூரை மீதான சூரிய மின்கலத் தொகுதிகளை வெற்றிகரமாக நிறுவிய சாதனையுடன் உள்ள Hayleys Solar ஆனது, Hayleys Fentons இன் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பிரிவாகும்.

# பட்டப்படிப்புக்கு ரூ. 10 மில்லியன் கடன் வழங்கும் கொமர்ஷல் வங்கி



இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கு உயர் கல்விக்காக ரூபாய் பத்து மில்லியன் வரை கொமர்ஷல் வங்கியிடமிருந்து கடனாகப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது. ஐக்கிய இராச்சியத்தின் எஸக்ஸ் பல்கலைக்கழகத்தின் கலை இளங்கலை அல்லது முதுகலை பட்டத்துக்காகத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கே இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. நாட்டின் தனிப்பெரும் தனியார் வங்கியுடன் திறந்த பல்கலைக்கழகம் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டுள்ளது. இதன் மூலம் இரண்டாம் அல்லது மூன்றாம் ஆண்டு பட்டப்படிப்பு மாணவர்களுக்கு கொமர்ஷல் வங்கி உயர் கல்விக்கான கடன் வசதிகளை சலுகை வட்டி வீத அடிப்படையில் வழங்கும்.

பிரத்தியேகமாக எஸக்ஸ் பல்கலைக்கழகத்தில் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடருவதற்காக இந்தக் கடன் வசதி வழங்கப்படும். இந்தக் கடனுக்கான வட்டி வீதம் விஷேடமானதாக அமைந்திருக்கும். பல்கலைககழகத்தின் கற்கை காலப் பகுதியைப் பொறுத்து திருப்பி செலுத்துவதற்கான வசதி காலமும் விஸ்தரிக்கப்படும் என வங்கி அறிவித்துள்ளது.

# பாரிய இரத்தினக்கற்களை காட்சிப்படுத்தும் FACETS Sri Lanka 2024



FACETS Sri Lanka 2024 கண்காட்சியானது, ஆசியாவின் முதன்மையான இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியாகும். இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் (SLGJA), தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை (NGJA), ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB) ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் எதிர்வரும் 2024 ஜனவரி 06 08 ஆம் திகதி வரை இக்கண்காட்சி இடம்பெறவுள்ளது. கொழும்பில் உள்ள சினமன் கிராண்ட் ஹோட்டலின் புகழ்பெற்ற ஏட்ரியம் லொபியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் பல்வேறு விசேட அரங்குகளும் (Pavilions) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த அரங்குகளில், Masterpiece Pavilion ஆனது அனைவரையும் மிகவும் ஈர்க்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இந்த அரங்கு, இலங்கையின் புகழ் பெற்ற நீலம் மற்றும் சிவப்பு மாணிக்கங்களின் நேர்த்தியான அழகை வெளிப்படுத்தும் வகையில் மிக சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உலகின் மிகவும் மதிப்புமிக்க, வெட்டப்படாத இரத்தினக்கற்களை ஒரே கூரையின் கீழ் காணும் அரிய வாய்ப்பு பார்வையாளர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

Masterpiece Pavilion அரங்கின் தலைவரும், SLGJA சங்கத்தின் பணிப்பாளருமான ஷீன் பாரூக் இது தொடர்பில் அவரது உற்சாகமான கருத்தை வெளியிடுகையில், "Sapphire Masterpiece Pavilion ஆனது, இரத்தினக்கல் மற்றம் ஆபரண அனுபவத்தை மாற்றியமைக்க உள்ளது. இலங்கையின் நீல மாணிக்கங்களின் பொக்கிஷத்தை, அவற்றின் மிகவும் அடிப்படையான நிலையிலும், நேர்த்தியான வடிவங்களிலும் உலகிற்கு பெருமையுடன் காண்பிக்கவுள்ளது." என்றார்.

# சொகுசு அறைகளுடன் சிறப்பான சேவை வழங்கும் மெல்ஸ்டா வைத்தியசாலை



ராகம மெல்ஸ்டா வைத்தியசாலையானது தங்களது தேவைக்கேற்ற மேலதிக சொகுசு அறைகள், கூடங்களுடன் அதன் வசதிகளிலான மற்றுமொரு விசேட வளப்படுத்தலை அறிவித்துள்ளது. புதிதாக இணைக்கப்பட்டுள்ள சொகுசு பிரிவானது சர்வதேச தரங்களுக்கு அமைவானதாகவும், கொழும்பிலுள்ள சிறந்த தனியார் வைத்தியசாலைகளுடன் ஒப்பிடுகையில் அதிநவீனமானதும் சௌகரியமானதுமான சேவைகளை வழங்குவதுமாகக் காணப்படும் அதேவேளையில், கொழும்பிலான சேவைகளில் ஒப்பிடக்கூடிய 30% 50% வரையில் குறைவானதாக, அணுகக்கூடியதும் இயலுமானதுமான செலவுத்தொகையையும் பேணுகின்றது.

சந்தடிமிக்க கம்பஹா பகுதியில் ஒரு முதன்மை தனியார் வைத்தியசாலையான, ராகம மெல்ஸ்டா வைத்தியசாலையானது, சமுதாயத்திற்குள் இலகுவாக அணுகக்கூடியதும் குறைவான விலையிலானதுமான முன்னணி சுகாதார சேவைக்காக நீண்டகாலமாக நிலவிய கேள்வியை தீர்க்கும் ஒரு முன்னோடி நடவடிக்கையாக இவ்விரிவாக்க துவக்கத்தினை பூர்த்திசெய்துள்ளது.

# பசுமை உறுதிமொழியுடன் உலக சேமிப்பு தினத்தை கொண்டாடிய HNB



இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB PLC, தனது அனைத்து ஊழியர்களுடனும் மேற்கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க பசுமை உறுதிமொழி மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு உறுதியான அர்ப்பணிப்பை மேற்கொள்வதாக தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த உறுதிமொழி, 2023 இல் முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட்டது.

ஊழியர்கள் QR குறியீடு மூலம் அதைத் திரையிட்டு பதிவிறக்கம் செய்து, முழுமையாக காகிதமற்ற செயல்முறையை உறுதி செய்தனர். உலக சேமிப்பு தினத்தன்று சேமிப்பு என்ற எண்ணக்கருவை சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் விஸ்தரிக்க, HNB தலைமை அலுவலக ஊழியர்கள் அனைவரும் நிலையான நடைமுறைகளுக்கு தங்கள் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தினர்.

காகிதம் பயன்படுத்துவதை குறைப்பதற்கும், எரிசக்தி வீண்விரையத்தைக் குறைப்பதற்கும், நிலையான போக்குவரத்தை ஊக்குவிப்பதற்கும், சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு கலாச்சாரத்தை வளர்ப்பதற்கும் அவர்கள் உறுதிபூண்டுள்ளனர்.

# பயணிகள் வாகன வணிகத்தில் BYD இணைந்த ஜோன் கீல்ஸ்



உலகின் முன்னனி புதிய ஆற்றல் வாகன (New Energy Vehicle) உற்பத்தியாளரான BYD ஆனது இலங்கையில் மிகப் பெரிய பட்டியலிடப்பட்ட நிறுவனமான ஜோன் கீல்ஸ் குழுமத்துடன் இணைந்து இலங்கை மக்களுக்கு அதிநவீன புதிய ஆற்றல் வாகனங்களை (New Energy Vehicle) வழங்குவதற்காக ஒரு கூட்டு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது. BYDஇன் உலக தலைமையகத்தில் இந்த கைச்சாத்திடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அதில் BYD ஆசியபசுபிக் வாகன விற்பனை பிரிவின் பொது முகாமையாளர் லியூ ஷுயெலியாங் மற்றும் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைவர் கிரிஷான் பாலேந்திரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய லியூ ஷுயெலியாங், "கடந்த 28 ஆண்டுகளில், BYD தொழில்நுட்ப புத்தாக்கத்துக்கான தனது உறுதிப்பாட்டிலும், அதன் பசுமை கனவிலும் உறுதியாக இருந்து வருகிறது.

இந்த கூட்டு உடன்படிக்கையின் மூலம், இலங்கை மக்களுக்கு, மேம்பட்ட, சுற்றுச்சூழலுக்கு உகந்த பயணிகள் வாகனங்களை வழங்க முடிவதோடு, மக்களின் அன்றாட வாழ்வில் 'மின்சார வாகனத்தை' 'அத்தியாவசிய வாகனமாக' ஆக்கும் எமது குறிக்கோளை அடைய வழிகோலும்." என்றார்.

# சமூக வழிகாட்டல் அறிக்கையை வெளியிட்டுள்ள TikTok

TikTok 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டு (2023 ஏப்ரல்ஜூன்) சமூக வழிகாட்டுதல்கள் செயலாக்க அறிக்கையை வெளியிட்டுள்ளது, தவறான தகவல்களுக்கு எதிரான போராட்டம் மற்றும் பாதுகாப்பான மற்றும் உள்ளடக்கிய இடத்தை உருவாக்குவதற்கான தனது உறுதிப்பாட்டை மேலும் உறுதிப்படுத்துகிறது. TikTok தனது பாவனையாளர்களின் நம்பிக்கையைப் பெறவும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் தொடர்ந்து பாடுபடுகிறது. தனது சமூக வழிகாட்டல்களை மீறும் உள்ளடக்கத்தை அகற்றவும், தவறான தகவல்களின் பரவலைத் தடுக்கவும் TikTok தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

2023 இரண்டாவது காலாண்டில் உலகளவில் 106,476,032 வீடியோக்கள் அகற்றப்பட்டன. இது TikTokஇல் பதிவேற்றப்பட்ட மொத்த வீடியோக்களில் 0.7% ஆகும். இவற்றில், 66,440,775 வீடியோக்கள் தானியக்க முறைகள் மூலம் அகற்றப்பட்டன, அதே நேரத்தில் 6,750,002 வீடியோக்கள் மறுபரிசீலனைக்குப் பிறகு மீண்டும் சேர்க்கப்பட்டன. தானியங்கி Spam கணக்குகளை உருவாக்குவதைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

# அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்திய அணி பரபரப்பு வெற்றி




கடைசி ஓவர் வரை பரபரப்பாக நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டி20 போட்டியில் இந்திய அணி 2 விக்கெட்டுகளால் திரில் வெற்றியை பெற்றது.

விசாகாபட்டணத்தில் நேற்று முன்தினம் (23) நடைபெற்ற இந்தப் போட்டியில் இந்திய அணி கடைசி 4 பந்துகளுக்கு 2 ஓட்டங்களை பெறவிருந்தபோது மூன்று பந்துகளில் மூன்று விக்கெட்டுகளை இழந்தது. இந் நிலையில் ரிங்கு சிங் கடைசி பந்தில் சிக்ஸர் ஒன்றை விளாசினார். அந்தப் பந்து நோ போலாக இருந்தது.

இந்த இரு அணிகளும் ஒருநாள் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆடி நான்கு நாட்களிலேயே இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட டி20 தொடர் ஆரம்பமாகியுள்ளது.

அவுஸ்திரேலிய அணி ஆறு விக்கெட்டுகளால் உலகக் கிண்ணத்தை வென்றபோதும் இரு அணிகளும் பல மாற்றங்களுடனேயே டி20 தொடரில் களமிறங்கியுள்ளன. இதில் அவுஸ்திரேலியாவின் ஜோஷ் இங்லிஸ் மற்றும் ஸ்டீவ் ஸ்மித், அதேபோன்று இந்திய அணித் தலைவராக செயற்படும் சூர்யகுமார் யாதவ் ஆகிய மூவரும் மாத்திரமே உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆடிய நிலையில் இந்தப் போட்டியில் களமிறங்கினர்.

இந்த மூன்று வீரர்களுமே போட்டியில் சோபித்தமை குறிப்பிடத்தக்கது. விக்கெட் காப்பாளரான இங்லிஸ் எட்டு சிக்ஸர்கள் மற்றும் 11 பௌண்டரிகளுடன் 50 பந்துகளில் 110 ஓட்டங்களை விளாசினார். இதன்மூலம் அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களுக்கும் 3 விக்கெட்டுகளை இழந்து 208 ஓட்டங்களை பெற முடிந்தது. இதன்போது ஸ்மித் 41 பந்துகளில் 52 ஓட்டங்களை பெற்றார்.

தொடர்ந்து பதிலெடுத்தாடிய இந்திய அணிக்காக சூர்யகுமார் 42 பந்துகளில் 80 ஓட்டங்களை பெற்றதோடு இஷான் கிஷனுடன் சேர்ந்து 112 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டார். கிஷன் 58 ஓட்டங்களை பெற்றார். இந்திய அணி 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் இந்த இருவரும் அணியை மீட்டனர்.

இதன்மூலம் இந்திய அணி 19.5 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 209 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. டி20 போட்டிகளில் இந்திய அணி எட்டிய அதிகூடிய வெற்றி இலக்கு இதுவாகும்.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டி20 போட்டி நாளை (26) திருவனந்தபுரத்தில் நடைபெறவுள்ளது.



**தோப்பூர் தினகரன் நிருபர்**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 34ஆவது தேசிய இளைஞர் மாவட்ட மட்ட மெய்வல்லுனர் போட்டியில் மூதூர் பிரதேச செயலக பிரிவு இளைஞர் கழகம் சார்பில் 3 தங்கங்களுடன் மொத்தம் 8 பதக்கங்கள் வெல்லப்பட்டன.

திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் (05) நடைபெற்ற இந்தப் போட்டியில் ஈட்டி எறிதல், பரிதி வட்டம் எறிதல், உயரம் பாய்தல் போட்டிகளிலேயே இளைஞர் கழகம் பதக்கங்களை வென்றது. இதன்போது அந்தக் கழக உறுப்பினர்கள் 3 தங்கம், 3 வெள்ளி, 2 வெண்கல பதக்கங்களை வென்றனர்.



அம்பாறை மாவட்ட சதுரங்க சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட எப். பாத்திமா இல்மா, ஸஹிரியன் மாஸ்டர் சதுரங்க சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்று வெற்றியீட்டிய எம். அனாஹித், எப். பாத்திமா இல்மா ஆகிய மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் அப்துல் றஸாக் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (படம்: மாளிகைக்காடு குறூப் நிருபர்)

## தனுஷ்க குணதிலக்கவின் வழக்கு கட்டணத்தை செலுத்த உத்தரவு



அவுஸ்திரேலியா பெண் ஒருவர் மீது பாலியல் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டில் இருந்து விடுதலை பெற்ற இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவுக்கு எதிராக அவுஸ்திரேலிய பொலிஸார் "நியாயமற்ற வகையில்" செயற்பட்டிருப்பதாக சிட்னி நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நீதிபதி சாரா ஹகேட் முன்னிலையில் வழக்கு விசாரணையின் செலவுகள் தொடர்பிலான விசாரணை நேற்று (24) இடம்பெற்றபோதே நீதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். அரச தரப்பினால் தொடுக்கப்பட்ட அந்த வழக்கு தொடர்பில் குறிப்பிடத்தக்க சிக்கல்கள் இருப்பதாகவும் நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி குணதிலக்கவின் வழக்கு செலவை அவருக்கு பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் உறுதி ஒன்றை வெளியிடும்படி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

டேடிங் ஆப் ஒன்றின் மூலம் அறிமுகம் பெற்ற அந்த அவுஸ்திரேலிய பெண்ணின் மீது அவரது வீட்டில் வைத்து பாலிய தாக்குதல் நடத்தியதாக குணதிலக்கவுக்கு எதிராக குற்றம்சாட்டப்பட்டது.

சிட்னி பொலிஸார் அவரை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கைது செய்தனர். வழக்கு விசாரணைக்குப் பின் குணதிலக்க கடந்த செப்டெம்பர் மாதம் குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டார். பின்னர் அவர் இலங்கை திரும்பினார்.

## உலக கனிஷ்ட குத்துச்சண்டை போட்டியில் மர்ஜுதீன் பங்கேற்பு



சர்வதேச குத்துச்சண்டை சம்மேளத்தினால் நடத்தப்படும் உலக கனிஷ்ட குத்துச்சண்டை சம்பியன்சிப் போட்டியில் இலங்கை சார்பில் பங்கேற்கும் ஒரே வீரராக கொழும்பு சாஹிரா கல்லூரியின் துவான் மர்ஜுதீன் பங்கேற்கிறார்.

அர்மேனியாவின் யெர்வானில் நேற்று ஆரம்பமான இந்தப் போட்டி எதிர்வரும் டிசம்பர் 4 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற எல்.வி. ஜயவீர குத்துச்சண்டை சம்பியன்சிப் போட்டியில் முதல் முறை குத்துச்சண்டை விளையாட்டில் களமிறங்கிய மர்ஜுதீன், பாடசாலை குத்துச்சண்டை விளையாட்டில் ஆதிக்கம் செலுத்தி வருகிறார். மேற்படி போட்டியில் வெற்றியீட்டியதை அடுத்து டீ.பி. ஜாயா குத்துச்சண்டை போட்டியில் சாதித்த மர்ஜுதீன் ஆண்டிறுதியில் ஸ்டப்ஸ் ஷீல்ட் சம்பியன்சிப்பில் முன்னிலை பெற்றார்.

தொடர்ந்து கனிஷ்ட தேசிய சம்பியன்சிப் மற்றும் இந்த ஆண்டு ஸ்டப்ஸ் ஷீல்ட் போட்டியிலும் வெற்றிகளைக் குவித்த நிலையிலேயே இந்தியாவின் புது டில்லியில் நடைபெற்ற சர்வதேச குத்துச்சண்டை பயிற்சி முகாமில் பங்கேற்றார். இந்நிலையில் பயிற்சியாளர் அப்துல்லா இபுனு மற்றும் முகாமையாளரான இரத்தினபுரி, தர்மாசோக கல்லூரியின் அதிபர் அமில தன்டக்க ஆகிய இரு அதிகாரிகளுடனேயே மர்ஜுதீன் உலக கனிஷ்ட குத்துச்சண்டை சம்பியன்சிப் போட்டியில் கலந்துகொண்டுள்ளார்.

## கல்முனை சாஹிரா செஸ் போட்டி



**கல்முனை மத்திய தினகரன், மாளிகைக்காடு குறூப் நிருபர்கள்**

கல்முனை சாஹிரா கல்லூரி தேசிய பாடசாலையின் 75ஆவது ஆண்டை முன்னிட்டு இடம் பெற்ற ஸஹ்றியன் மாஸ்டர் செஸ் சம்பியன்ஷிப் நிகழ்வுகள் கடந்த ஞாயிறன்று (19) நடைபெற்றது.

இப்போட்டி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 450 போட்டியாளர்கள்கள் கலந்து கொண்டனர்.

சாஹிரா கல்லூரியின் அதிபர் எம்.ஐ. ஜாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபகர் பொறியியலாளர் உதுமான்கண்டு நாபீர் கலந்துகொண்டார்.

இந் நிகழ்வில் கௌரவ அதிதியாக சாய்ந்தமருது கோட்ட கல்வி அதிகாரி என்.எம். அப்துல் மலிக் கலந்து சிறப்பித்ததோடு உதவி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## பணிச்சுமையால் ஐ.பி.எல்லில் இருந்து விலகினார் ஸ்டொக்ஸ்



இங்கிலாந்து டெஸ்ட் அணித் தலைவரும், சகலதுறை வீரருமான பென் ஸ்டோக்ஸ் 2024 ஐ.பி.எல் போட்டியிலிருந்து விலகியுள்ளார்.


பணிச்சுமை மற்றும் உடற்தகுதியை மேம்படுத்துவதற்காக ஐ.பி.எல் போட்டியிலிருந்து விலகுவதாக அவர் அறிவித்துள்ளார். பென் ஸ்டோக்ஸின் முடிவுக்கு உறுதுணையாக இருப்பதாக சென்னை சுப்பர் கிங்ஸ் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

2023 ஐ.பி.எல் போட்டிக்கு முன் சென்னை சுப்பர் கிங்ஸால் இந்திய நாணயப்படி ரூ. 16.25 கோடிக்கு ஏலத்தில் எடுக்கப்பட்ட ஸ்டோக்ஸ் காயம் காரணமாக கடந்த ஐ.பி.எல் தொடரில் 2 ஆட்டங்களில் ஆடினார்.

இதைத் தொடர்ந்து, ஆஷஸில் முழு நேர துடுப்பாட்ட வீரராக விளையாடிய ஸ்டோக்ஸ், ஓய்விலிருந்து வந்து ஒருநாள் உலகக் கிண்ணத்தில் விளையாடினார். உலகக் கிண்ணத்தின் பின் முழங்காலில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள ஸ்டோக்ஸ் முடிவெடுத்தார். இந்தக் காயம் காரணமாக 18 மாதங்களாக அவர் அவதிக்குள்ளாகி வந்தார். இதன் காரணமாகவே முழு நேர துடுப்பாட்ட வீரராக அவர் செயல்பட ஆரம்பித்தார்.

அடுத்தாண்டு இந்தியாவுக்கு எதிராக 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து விளையாடவுள்ளது. இதற்கு முன்னதாக அறுவைச் சிகிச்சை மேற்கொண்டு முழு உடற்தகுதியை அடைய வேண்டும் என அவர் முடிவு செய்துள்ளார்.

## பிக் பாஷ் தொடரிலிருந்து விலகினார் ரஷித் கான்



எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள பிக் பாஷ் தொடரில் அடிலெய்ட் ஸ்டிரைக்கர்ஸுக்காக விளையாடும் ஆப்கானிஸ்தான் சகலதுறை வீரர் ரஷித் கான், காயம் காரணமாக விலகியுள்ளார்.

ரஷித் கான் முதுகுப் பகுதியில் லேசான அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளவுள்ளார். இவருக்குப் பதில் மாற்று வீரர் யாரும் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

அடிலெய்ட் ஸ்டிரைக்கர்ஸுக்காக 7 ஆண்டுகளாக விளையாடி வருகிறார் ரஷித் கான். இதுவரை 69 ஆட்டங்களில் பங்கேற்று 17.51 சராசரியுடன் 98 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

நடக்கவிருக்கும் பிக் பாஷ் போட்டியில் பங்கேற்கமாட்டேன் என இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரரான ஹாரி புரூக் அண்மையில் அறிவித்திருந்தார். அதைத் தொடர்ந்து தற்போது ரஷித் கானும் விலகியுள்ளார்.

அண்மையில் முடிந்த உலகக் கிண்ணத்தில் ரஷித் கான் 11 விக்கெட்டுகளை வீழ்த்தி, ஆப்கானிஸ்தான் அணிக்காக அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவராக திகழ்ந்தார்.

## Katukurunda Speed போட்டி: SLT–MOBITEL அனுசரணை




தொழில்நுட்பத்தினூடாக விளையாட்டுக்கு வலுவூட்டுவதற்கான தனது அர்ப்பணிப்பை மீள உறுதி செய்யும் வகையில், SLTMOBITEL இனால் 'Katukurunda Speed 2023' கார் ஓட்டப் பந்தயத்திற்கு தொலைத்தொடர்பாடல் அனுசரணை வழங்குகிறது. உயர் வேகம் மற்றும் நம்பகமான இணைப்பு ஆகியவற்றை நிலையான மற்றும் மொபைல் பிரிவுகளில் வழங்கும் முன்னோடி சேவை வழங்குநராக திகழும் SLTMOBITEL, தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாக இந்நிகழ்வுக்கு அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டி டிசம்பர் 3ஆம் திகதி இலங்கை விமானப் படை கட்டுகுருந்த பந்தயத் திடலில் நடைபெறவுள்ளது. இலங்கை வாகன விளையாட்டு (SLAS) சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வில், 10 கழகங்கள் பங்கேற்கின்றன.

பல்வேறு பிரிவுகளின் முன்னணி பந்தய வீரர்களை கொண்டதாக இந்த ஆண்டின் போட்டி அமைந்திருக்கும். மேலும், SLTMOBITEL இன் உத்தியோகபூர்வ YouTube மற்றும் Facebook சௌனல்கள் மற்றும் PEO TV இல் நேரலையாக ஒளிபரப்பு செய்யப்படும்.

# ஜனவரியில் இலங்கை வருகிறது சிம்பாப்வே




ஒருநாள் மற்றும் டி20 சர்வதேச போட்டிகளில் ஆடுவதற்காக சிம்பாப்வே அணி எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.

2024 ஜனவரி 6 ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தத் தொடரில் இலங்கை மற்றும் சிம்பாப்வே அணிகள் 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகளில் ஆடவுள்ளன. இதன் ஒருநாள் போட்டிகள் ஜனவரி 6 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகள் பல்லேகல சர்வதேச கிரிக்கெட் அரங்கில் நடைபெறவுள்ளன.

டி20 சர்வதேச போட்டிகள் ரங்கிரி தம்புள்ளை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிகள் ஜனவரி 14, 16 மற்றும் 18 ஆம் திகதிகளின் நடைபெறும். இந்த டி20 மற்றும் ஒருநாள் போட்டிகள் அனைத்தும் பகலிரவு ஆட்டங்களாகவே நடைபெறவுள்ளன.

இந்தியாவில் அண்மையில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடருக்குப் பின்னர் இலங்கை அணி பங்கேற்கும் முதல் கிரிக்கெட் தொடர் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை கிரிக்கெட் மீது சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் தடை விதித்தபோதும் இலங்கை அணி சர்வதேச போட்டிகளில் பங்கேற்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.